236

தூங்காதே தமிழா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

O-,6NAY3,T
N49
105747

... நிலையம்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAY 1949
MADRAS

ஆக்கியோன் - ஆயன்

இன்ப நிலயம்
43, பாளையப்பன் தெரு,
ஏழுகிணறு :: சென்னை 1.

முதற் பதிப்பு 1949
உரிமையுள்ளது

O, 6NAY3, T
N49

விலை அணா 0-14-0

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
105747
EGMORE, MADRAS-600 008

Commercial Printing & Publishing House, Madras-1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - MAY 1949
MADRAS

பதிப்புரை

தற்பொழுது நாட்டில் தமிழன் என்ற போர்வையிலும், சீர்திருத்தம் என்ற பெயராலும் மக்கள் மனதை மாற்றும் வகையில் உண்மைக்கு மாறுன விஷயங்களை எடுத்துக் கூறி விஷமப் பிரசாரம் நடந்து வருவதை இதனுல் கூடுமான வரையில் மக்களை விஷம பிரசார வலையில் வீழாதபடி தடுக்கலாமெனக் கருதியே இத் "**தூங்காதே தமிழா**" என்ற புத்தகத்தை என்னுல் எழுதப்பட்டது. இதில் கடவுட் பக்தி, உண்மை, ஒழுக்கம், அன்பு, கற்பு, கொல்லாமை, பிரிவினை அவசியமா? என்பன போன்ற உயரிய கருத்துக்கள் ஆன்ருேர்களின் சான்றுகளுடன் மிளிர்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியன் என்றென்றும் மறக்க முடியாத, இந்திய ஞானத்தை நிலைக்கச் செய்த ஆண்ம வீரர் சுவாமி **விவேகானந்தா** அவர்களின் சிகாகோ பிரசங்கமும் சேர்க்கப்பட்டுள்ளது போற்றத் தக்கது. தமிழன்பர்கள் இதனை வரவேற்று ஆதரவு தந்தால் மேலும் அறிய நூல்கள் வெளிவர அனுகூலமாக யிருக்குமென்றெண்ணுகிறேன்.

மழுவை மு. ஏழுமலை ('ஆயன்')

மதிப்புரை

தூங்காதே தமிழா ! என்றதைப் பார்த்ததும் நான் சற்று அயர்ந்து விட்டேன். என்ன தமிழன் தூங்குகிருனு வென்று! புத்தகத்தை படித்துப் பார்க்கையில், பல நல்ல விஷயங்களை மக்கள் அறிந்துக்கொண்டு உணர்வு பெறவே மழுவை - மு. எழுமலை பிள்ளை இதை எழுதியுள்ளார். இதில் தெய்வம் எத்தன்மைத்தது! உருவ வணக்கம் வேண்டியது தானு? கற்பு! என்ருல் என்ன? போன்ற உண்மைகள் மிளிருகின்றன. ஒவ்வொரு தமிழ் மகனும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம். பல வகையிலும் இப்புத்தகத்திலுள்ள விஷயங்கள் யாவும் போற்றற் குரியதே.

சாம்பியன்ரீப்ஸ்
22—3—49

P. A. குப்புசாமி நாயுடு
General Office

தூங்காதே தமிழா

சொல்லுஞ் செயலு மொன்றா யிருப்பின்—யாவும்
வெல்லும் வகையறிவான் வீரத் தமிழன்.

—ம. மு. வ.

"தமிழா தூங்காதே என்றதைக் கேட்டு அன்பர்கள் கோபிப்பார்களோ என்னவோ! அவர்கள் கோபிக்க மாட்டார்கள் என்பது எனது திடமான நம்பிக்கை. அன்றியும் தமிழன் எதையும் ஆராய்ந்து அறியும் தன்மையுடையவன். அவனுக்கு விஷயம் உணராமுன் கோபம் வராது. தீர்க்காலோசனை யுடையவன் தமிழன் என்பது தெளிவு. தமிழனா தூங்குவான்? ஒருக்காலும் தூங்க மாட்டான். அவன் தூங்கும் காலமும் இது வல்லவே! தமிழன் எந்த காலத்தும் பெருந் தூக்கம் தூங்கினவனல்லவே. ஆயினும் "**சுடர் விளக்காயினும் தூண்டுகோ லொன்று வேண்டும்**" என்று ஆன்றோர்கள் கூறியது நமது நினைவிற்கு அடிக்கடி வருகிறதே அது தமிழனின் இயற்கைக் குணம். அதை மாற்ற எவராலும் முடியாதுதான். நாம் எவ்வளவு தான் நாத்தீகம் பேசி நாத் தழும்பு ஏறினாலும் ஆன்றோர் பழமொழிகளை எடுத்தாளாமல் விடுவதில்லை. அவர்களைவிட அறிவிற் சிறந்தவர்கள் என்று நம்மை நாமே கூறிக் கொண்டாலும் அவர்களுடைய மேற்கோள் நம்மை யறியாமலே வந்து விடுகின்றன. பெரிய தலைவர்களாயுள்ளவர்கள் மேடை பிரசங்கம் செய்யுங் காலங்களில் நாம் அவர்களிடத்தும் கேட்கின்றோம். இது கண்கூடு. ஆனால் நாம் அப்போது அறிவதில்லை. ஏன்? பேச்சு போகும் உணர்ச்சியில் சிக்குண்டு விடுவதால். பின்னர் அறிகிறோம். இது சகஜந்தான். தவறில்லை. பின்னர் கவனிப்போம்.

தமிழா ஆஸ்திக மணம்கொண்ட நீ நாஸ்திக வலையில் சிக்கிவிடாதே. நீ எங்கு அந்த கானலை நீர் என்று ஏமாந்து வீழ்ந்து நொந்து விடப் போகின்றாயோ வென்று அன்னை பாரத தேவி அலறுகிறாள். அன்னை மடியில் தவிழ்ந்து விளையாடிய நீ அவள் பணி விடுத்து இன்னல் புரிந்தால் எங்ஙனம் உய்வாய். வந்தே மாதரம் என்று வாய் குளிர வாழ்த்திய நீ இன்று வசை பாட இசைவாயோ? வஞ்சக வலை வீசி எங்கு வளைத்துக் கொள்ளப் போகிறதோ கஞ்சக் கூட்டம் என்று தஞ்சமளிக்கும் தாய் உன்னை தட்டி எழுப்ப தயாராய் கரத்தில் சூலத்துடன் நிற்கிறாள். அன்பு மயமான தமிழா வறுமையடைந்துள்ள நீ அயர்ந்து தூங்காதே.

தமிழா தூங்காதே என்றால் தமிழன் படுத்து வெறுந் தூக்கம் தூங்குகிறான் என்று அர்த்தமல்ல. அப்படி நான் கூறினால் நாங்கள் என்ன கும்பகர்னனா? என்று கேட்கப் புறப்பட்டு விடுவீர்கள். தமிழன் விஷயங்களில் தூங்குகிறான் என்பதுதான் எனது எண்ணம். உண்மைத் தமிழன் ஒத்துக் கொள்வான்; கோபித்துக் கொள்ள மாட்டான் என்பதும் எனது பரிபூரண நம்பிக்கை. உண்மைத் தமிழன் தூங்கான். அப்படி தூங்கினாலும் விஷய உணர்வு பெற்றதும் "**மூரி நிமிர்ந்து முழங்கி புறப்பட்டு**" என்றபடி அதாவது சிங்கமானது குகைக்குள்ளே படுத்திருந்து எழுந்து வெளிவரும் போது என்ன நிலையில் வருமோ! அந்த நிலையில் வருவான் தமிழன். அதை எவரும் மறுக்க முடியாது. வீரத்தமிழன் வெகுளியல்ல. ஆக்க வேலையில் ஆர்வங் கொண்டவன். தூக்கத்தை துறத்தியடிப்பவன். இருப்

பினும் தமிழன் அயர்ந்து தூங்கிவிடப் போகிரு னென்று ஊக்கமளிக்க நம் நாட்டில் அவ்வப்போது பல பெரியார்கள் தோன்றி பல நீதிகளை நமக்கு எடுத்துக் கூறி யுள்ளார்கள். அதை இன்றும் ஏட்டில் காண்கின்ருேம். ஏன் செயலிலும் கண்டுள்ளோம்.

தமிழன் அறியாமை என்னும் வலையில் பட்டு அல்ல லுருகின்ருன், உண்மையை மறந்தான், சந்தேகத்தில் ஆழ்ந்தான், தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்கு தொன்னை ஆதாரமா? என்ற தர்க்க வாதத்தில் மிகுந்தான் என்ற பெயர் எடுக்க தமிழன் ஒருக்காலும் சம்மதியான். தமிழன் தூங்குகிருன் என்று வஞ்சகப் பேய்கள் அஞ்சலி செய்து பஞ்சக் கூத்தாடி எக்காளம் போடுகின்றன. வேதம் புரட்டு, சாத்திரம் புரட்டு என்றெல்லாம் கூப்பாடு போடுகின்றன. தமிழன் மௌனம் சாதிக்கிருன். ஏன்? **வறுமையால் வாடி வதங்கி யிருக்கிருன், உழைப்பில் ஊதியம் போதாது உள்ளம் நொந்திருக்கிருன், வேலையில்லாது வெருக் கொண் டுள்ளான், அண்டு கொள்ளாத பண்ட விலையைக் கண்டு சிந்தை கலங்கி யுள்ளான்.** இந்த நிலையில் தமிழனின் சிந்தையை மாற்ற விந்தை புரிகின்றனர். தமிழன் கேட்பது இயல்புதானே! தவறு இல்லையே. **எறும்பூரக் கல்லும் தேயுமல்லவா?** தமிழனின் மனமும் கொஞ்சம் மாறியுள்ளது. ஆனால் அவர்களின் எண்ணம் பலிக்குமா என்பது தமிழனுக்குத்தான் தெரி யும். ஆயினும் வருமையில் தோன்றும் எண்ண மெல்லாம் உணர்வு பெற்றவுடன் மறைந்து போகும். இது தமிழனிட முள்ள வீர குணம். அது குன்றின் மீதிட்ட விளக்கு போன்று விளங்கி வருகிறது. **தமிழா தூங்காதே.**

நமது சுதந்திரம்

என் ஆயுள் காலத்திலேயே நான் சுதந்திரம் வாங்கித் தந்து அதை என் கண்ணால் கண்டு களித்து உயிர் துறப் பேன் என்ருர் **அண்ணல் காந்தியடிகள்.** தவரியதா? இல்லை.

உண்மை பலித்தது. உண்மையை சொன்னார். அதன்படி செயல் புரிந்தார் நம் துணைக் கொண்டு. வெற்றி கொண்டோம், பெற்றோம் சுதந்திரத்தை, "**எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு**" என்று வள்ளுவர் குறளை வோதுகின்றோமே பொருளிருக்கிறதா? அதற்கு மாறாகத்தானே தமிழன் செயல் இருக்கிறது என்று கூற இடந்தருவதா? ஆயுத பலம் மிகுந்த, விஞ்ஞான ஆராச்சியில் சிறந்த இந்த காலத்தில் அதுவும் ஆகாய விமானம் என்ன? சப்மெரின்களென்ன? அணுகுண்டுகளென்ன? இத்தியாதி போர் சாதனங்கள் படைத்த ஒருஏகாதிபத்தியக் கூட்டத்தினரை,முழுந்தடியும் வைத்திருக்க உரிமை இல்லா நம்மைக் கூட்டிக் கொண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்று சாத்வீக போர் தொடுத்து சொட்டு ரத்தமும் சிந்தாமல் வீர சுதந்திரம் வாங்கித் தந்த அண்ணலையும், அந்த ஸ்தாபனத்தையும் தூற்ற கேட்டுத் தானே தமிழன் நிற்கிறான். உலகம் நாம் பெற்ற சுதந்திரத்தை கண்டு வியக்கிறது; தமிழன் சிரிக்கின்றான். எதை மறந்தாலும் இந்த ஒன்றை உண்மைத் தமிழன் மறப்பனோ? உலகந்தான் ஒப்புமா? மறந்தாலும் தமிழன் உய்வானோ? உலகம் உள்ளளவும் போற்ற தமிழன் கடமைப்பட்டவன். சிந்தனை செய்த் தமிழா! சிரிய எண்ணங்கொள் தமிழா! தூற்றலைக் கேளாதே தமிழா! துயில் நீத் தெழு தமிழா!

காப்பதுன் கடன்

பெற்ற சுதந்திரத்தை போற்றி காப்பது சுத்த தமிழனின் உற்ற கடைமை யன்றோ! அதை விட்டு நாசவேலைக் காரர்களுக்கு ஆக்கமளிப்பானோ தமிழன். **சுதந்திரம் யாருக்கு?** என்ற கேள்வியைப் போட்டு ஏய்க்கிறான் ஒரு தமிழன். தமிழா நீ தூங்காதே. அதிகாரம் ஒருவர் கையில் இருந்து மற்றொருவர் கைக்கு வந்தால் குட்டி தேவதை

களுக்கு எல்லாம் கொள்ளை லாபந்தான். கொள்ளை அடிப்பவர்கள் அடித்துக் கொண்டே தானிருப்பர். பட்டினி கிடப்பவன் பட்டினியாகத்தானிருப்பான். யார் எக்கேடு கெட்டாலென்ன? கொள்ளை லாபமடிக்கும் பேர்வழிகள் செல்வம் சேர்ப்பதில் கண்ணுடையவராகவே யிருப்பார்கள். ஆனால் இவையனைத்தும் நெடு நாளைக்கு நில்லா. கொஞ்ச நாளைக்குத்தான் நடக்கும். அரசியல் நிர்வாக சட்டங்கள் அமுல் நடக்க நடக்க எல்லாம் சரியாகிவிடும் இது சரித்திர மறிந்த உண்மை.

அதிகாரத்திற்கு எவர் வந்த போதிலும் வானை வில்லாக விளைத்து விட முடியாது. மக்களுடைய ஒத்துழைப்பு அவசியம் இருந்தால் கூடிய சீக்கிரம் நலனடையலாம். அரசியலுக்கு முட்டுகட்டை போட்டால் வேறொரு சர்க்கார் வந்தாலும் தூற்றத்தான் செய்வர் இது சகஜம். கால மழை இல்லை. பஞ்சம் தலைவிரித்தாடுகின்றது. மந்திரம் போட்டு சாகுபடி செய்ய முடியாது. இதை நன்றாய் அறிவான் தமிழன். ஆயினும் அயலார் சொல்லில் கொஞ்சம் அகமகிழ்கிறான். "**புறஞ் செல்லும் மனதை அகத்துள் நிறுத்து வானாகில்**" அறிவான் உண்மையைத் தமிழன். அறிந்தால் தூ வெனத் தள்ளுவான் பொய்யை. தமிழா! பெற்ற நிதியை கள்வர் கவரா வண்ணம் பாது காத்துக் கொண்டால்தானே பங்கீடு செய்து கொள்வீர்கள். சண்டையிட்டுக் கொண்டிருந்தால் கள்வன் கவர்ந்து கொள்ளானோ? விலை தந்து வாங்கிய நிலத்தை பாதுகாத்து பயிரிட்டால்தானே பலனடையலாம். வெட்டி சண்டையிட்டு முட்டதரிசாய் போட்டு விட்டால் கிட்டும் பலன் என்ன? தமிழா உணர்ந்துப்பார். எடுப்பார் கைக்குழந்தைப் போல் கெடுப்பார் சொல்லைக் கேளாதே. துள்ளி எழு தமிழா!

தனித்து வாழ்வதா ?

தமிழா நீயுமா தனித்து வாழ எண்ணுகிறாய்? தனித்து வாழ்ந்த முன்னைய அரசர்கள் கதி என்ன ? சரித்திரம் படித்த நீ சிந்திக்க நேரமில்லையா? சிறு நாடாக அரசாண்ட மன்னர்கள் மண்ணாசைக் கொண்டு நாடு பிடிக்கஒருவரோ டொருவர் மோதிக் கொண்டதாலன்றோ நம் நாட்டில் அன்னியன் புக நேர்ந்தது. அன்று புகுந்த அவர்களுக்கு நம் நாட்டை துண்டு போட்டு தந்தோமே தமிழா மறந்தாயா ? இன்று நாம் தனியரசு வேண்டி அதைப் பெற்று நடத்திவரும் காலை என்ன நிகழும்? சரித்திர காலத்தைப்பார். நமக்குள் பதிந்து கிடக்கும் பொறாமை உச்ச ஸ்தானம் பெற்று உள்நாட்டு குழப்பம் ஏற்பட, அதை சாதகமாக்கிக் கொண்டு திரும்பவும் அன்னியன் தலையிட்டு பங்கு போட்டுக்கொள்ளவா ? தமிழா இதற்கு காது கொடாதே. இன்று நம் நாட்டிலுஞ்சரி, வெளி நாட்டிலுஞ் சரி என்ன நிகழ்கின்றன என்பதை சற்றே ஏற்று நோக்கு தமிழா உண்மை விளங்கும். தமிழன் கூடிவாழும் மனமுடையவன் என்பது பொய்யல்ல. எல் லோரும் சமம் என்னும் பரந்த எண்ணமுடையவன். தனித்து வாழ மனங்கொள்வானு? தமிழா தூங்காதே பிரிவினையை காதில் வாங்காதே!

நாம் திருந்த வேண்டும்

பிறருக்கு உபதேசம் செய்ய புறப்படு முன் நாம் சரி வர நடந்துக் கொள்ளுகிறோமா ? என்பதை முதலில் கவனித்துக் கொள்ள வேண்டும். தன்னை முதலில் திருத்திக் கொள்ள சக்தி இல்லையேல் எனையோருக்கு உபதேசம் செய்ய யோக்கிதை யில்லை, என்பது வெள்ளிடை மலை. "வீட்டுக்கில்லையடி மானே ஊருக்கு" என்ற கதை போல எண்ணி நடப்பானுகில் அவன் வேஷக்காரனே, இவ்வித உபதேசம் செய்பவர்கள் நம் நாட்டில் எண்ணிறந்த பேச்

சாளர்களாகி விட்டார்கள். அவர்கள் பேச்சும் முன்னுக்குப் பின் முரணுகவே யிருக்கும். இராமாயணம் புரட்டு, கட்டு கதை என்பார்கள். மேடை மீது ஏறி பேச ஆரம்பித்து விட்டால் காங்கிரஸ்காரர்கள் பகீரதன்களா என்ன மழை கொண்டு வர என்று பேச்சு வேகத்தில் கொட்டி விடுவார்கள். இராமாயணமே பொய் என்பவர்கள் பகீரதன் ஒருவனிருந்தான் அவனுல் கங்கை மண்ணுலகு வந்தாள் என்றதை ஒப்புக் கொள்வதாகுமே என்று கூட கவனிப்பதில்லை. நாமும் கரகோஷம் செய்து விடுகிறோம். ஏன்? அவர்கள் நாவண்மையில் சொக்கி விட்டதினுல் தான். அந்த சமயம் நாம் உணர்வதில்லை.

என்னைப் பழித்தாலும் பழி என்னுடைய கக்ஷியை பழித்தால் நான் சும்மா விட்டேன் பிளந்துக் கட்டுவேன். அன்று காண்டீவன் என்ன சொன்னுன். என்னை பழித்தாலும் நான் சகித்துக் கொள்வேன்; என்னுடைய காண்டீவத்தை (வில்லை) பழித்தால் அவனுடைய தலையை யறுப்பேன் என்றுன். அதை நாம் பின் பற்ற வேண்டும். பாரதம் பொய் என்று கூறும் பகுத்தறிவாளருக்கு இந்த உவமானம் பொருந்துமா? இதை எல்லாம் தமிழன் தற்போது தாண்டவமாடும் வறுமையில் எவர் எதைச் சொன்னுலும் தலையாட்டவும், கை தட்டவும் முற்பட்டு விடுகிறுன். தமிழனுக்கு நல்ல ஞானம் உண்டு, ஏதோ மயான வைராக்கியம் என்கிறுர்களே அதாவது சுற்றத்தாரோ, அன்றி நண்பரோ இறந்து விட்டால் சவத்தோடு சுடலை போகிறோம் சவத்தை சுட்டெரிக்கும்போது, "என்ன ஸார்? நன்றுக சம்பாதித்தார், நல்ல பெயரெடுத்தார் அதை செய்தார், இதை செய்தார் ஆனுல் என்ன கொண்டு போனுர் பிடி சாம்பலாகி விட்டார் எல்லாம் அவ்வளவுதான் ஸார் உலகத்தில் வேறென்ன இருக்கிறது? என்பார்கள். வாய்க்கரிசியிட்டு, கையலம்பி, புகையிலை வாங்கி திரும்பினவுடன் அதே பேர்வழி என்ன சொல்கிறுர், ஏன் ஸார் வளவ

னூர் வையாபுரி பிள்ளை இருக்கானே நிலத்தை யீடு காட்டி மூவாயிர ரூபாய் வாங்கி மூன்று வருடமாகிறது. படவா ராஸ்கேல் ஏமாற்றுகிறுன் ஸார். பத்திரத்தை தாக்கல் போட்டு விட்டேன் அவனை குட்டி சுவராக்கி விடுகிறேன் பார் என்கிருர். இதன் அர்த்த மென்ன? அவர் அதை உணர்கிருரா? இந்த மாதிரிதான் தமிழன் கூட்டத்திற்குப் போவதும் சொற்பொழிவு கேட்பதும், கைத் தட்டுவதும், வீட்டுக்கு வந்தால் காற்றில் விடுவதுமாக யிருந்து விடுகிருன். இந்த நிலை மாற வேண்டும். என்ன பேசுகிருர்கள் என்பதை கவனிக்க தமிழன் விழித் தெழ வேண்டும். இன்றேல் பேச்சாளர்கள் அவர்களது போக்கிற்கு நம்மை சாதக மாக்கிக் கொண்டு நம்மீது குதிரை ஏறுவார்கள். தமிழா தனித்திருந்து சிந்தனை செய்துப் பார் உண்மை விளங்கும் உறங்காதே.

நாம் முதலாளியிடம் சம்பள உயர்வு கோருகிறோம் கொடா விடில் ஒன்று படுகிறோம், நடவடிக்கையில் இறங்குகிறோம். அதற்கும் இணங்காவிடில் வேலை நிறுத்தம் செய்கிறோம். அப்போது நமக்குகொஞ்சம் ஆத்திரம் மேலெழும்பி ஒழிக கோஷிக்கிறோம். பின்னர் ஒருவாறு வெற்றி பெற்று வேலைக்குப் போக துணிகிறோம். இவ்வளவு போராட்ட மனமுள்ள நாம் நம்மிலும் கீழ் நிலையிலுள்ள ஒரு கூலிக்காரனுக்கு நாம் முதலாளியாகி விடுகிறோம். அப்போது நாம் என்ன சொல்கிறோம் தெரியுமா? கட்டை எடுக்கும் கூலிக்காரன் என்று வைத்துக் கொள்ளுங்கள், அவன் "சாமி குண்டுக்கு இரண்டணு கூலி வேண்டும்" என்று கேட்டால், நாயே ஆனைகெவுனியிலிருந்து அரையணு கூலிடா குண்டுக்கு. நான் போனுல் போகிறது என்று அரையணு கூட்டி ஒரு அணுவாகக் கொடுத்தால் போதாதா? எவ்வளவு ஆசையடா உனக்கு என்கிறோம். இப்போது அந்தக் கூலிக்காரன் யாரை ஒழிக என்று சொல்வது?

நாம் ஒவ்வொருவரும் இப்படியேதான் ரிக்ஷாக்காரனை மிரட்டுகிறோம், நம் வீட்டு வேலைக்காரனை வெருட்டுகிறோம். தமிழா ; நீ சிந்தனை செய்து சீறி எழும் சக்தியுள்ளது உனக்கு; விழித்தெழு.

தமிழன் ஒன்றுபட வேண்டும்

நாம் ஒன்றுபட வேண்டும் என்று எங்கு பார்த்தாலும் ஒரே பேச்சாக பேசப்பட்டு வருகிறது. அவசியந்தான்; அதைப்பற்றி யாரும் குறைகூறவே முடியாது. தமிழன் ஒன்றுபட்டு வாழ்ந்தால் உலகம் புகழும் பாரதியாருங்கூட **"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே நமக்குள் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் 'தாழ்வே"** என்று கூறினார் அது அமர கவியாகும். அவ்விதமிருந்தே தான் இன்று சுதந்திரம் பெற்றோம். அந்த ஒன்றுபட்ட ஐக்கியம் எல்லாவற்றிலும் மிளிர வேண்டாமா? முதலில் பெற்ற சுதந்திரத்தை காப்பாற்றிக் கொள்ள நமக்குள் ஐக்கியமில்லை. எத்தனை கட்சிகள், எத்தனை கொள்கைகள், எத்தனை வசை புராணங்கள், எத்தனை வகுப்பு வாதங்கள் இன்று நமது நாட்டில் நடமாடுகிறது. இதை நாம் தினந்தினம் கண்கூடாகக் காண்கிறோம். அரசுரிமை எற்று ஆட்சிபுரிபவர்களுக்கு இடுக்கண் விளைப்பது தான் ஐக்கியமா? எண்ணிப்பார் தமிழா?

ஒரு குடும்பத்தில் அண்ணன் ஏழையாக யிருக்கிறான் பிள்ளைகள் பல விருக்கின்றன. அடுத்த வீட்டில் தம்பி நல்ல வருவாயோடு சுகஜீவனம் செய்கிறான். அண்ணன் குழந்தைகள் சிற்றப்பன் வீடாச்சே போனால் பசிக்கு ஏதேனும் கிட்டும் என்று ஆவலாக வருகிறது. அடித்து துறத்துகின்றான் சிற்றப்பன். **"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளைத் தானே வளரும்"** என்ற பரந்த நோக்கமுள்ள தமிழன் இன்று தமயன் சேயைப் பதற அடிக்

கிருன். அதுமட்டுமல்ல அவனை அண்ணன் என்று கூற வும் மனம் கூசுகிருன் என்ன ஐக்கியம் தமிழா! அந்தோ தமிழ் நாடே!

ஐக்கியமாக யிருந்து முன்னேற்றமடைந்து வாழ்க்கை நடத்தும் மற்றவரை நாம் தூற்ற கற்றுக் கொண்டோமே யன்றி, நாம் முன்னேற்றமடைய நம் வகுப்போடு ஒத்து வாழ இஷ்டப்படவில்லை. நமக்கு கீழிருப்பவன் நமக்கு சமதையாக வரவும் இஷ்டப்படவில்லை. அவன் தவறி கீழ் வீழ்ந்தாலும் சும்மா விடுவதுமில்லை; அவன் தலை மீது கல்லைத்தள்ள நாம் தயாராக யிருக்கிறோம். "**தனக்கு ஒரு கண் போனாலும் அண்டை வீடானுக்கு இரண்டு கண்ணும் போக வேண்டும்**" என்ற மனப்பான்மை நம்மை விட்டு அகல வேண்டும். இன்றேல் நாம் முன்னேற்றமடைவது எங்ங னம். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் நம்பாதிருக்குமளவும் நமக்கு விமோசனமே கிடையாது.

பரந்த நோக்கமுள்ளவர்களாய் பண்டை காலத்து தமிழர்கள் இருந்ததால்தான், அந்த காலத்தில் நம்மை அண்டி வந்த அயலாரையும் அன்புடன் வரவேற்று ஆதரித் ததுமின்றி, அவர்களுடைய கலை ஞானங்களுக்கும் ஆக்க மளித்து பாதுகாத்தார்கள். அந்த சீரிய எண்ணமும், சிறந்த குணமும் இருந்ததால்தான் நம் நாடு பல நூற் ருண்டுகள் அன்னியருக்கு அடிமைப்பட்டு கிடந்தும் நமது கலைஞானங்கள் அழியாமல் நாமும் எலும்புங் கூடு மாகவாவது வாழலானோம். இத்தனை வருடங்கள் அடி மைப்பட்டு கிடந்து தன் மதம் சிதைவுபடாது இருந்ததாக சரித்திரத்தில் காணவில்லை. உண்மை; கண் விழி தமிழா! கானலை நீரென்று கருதாதே. கேவலம் காக்கையன்றோ நாமிடும் பிடி யன்னத்தை உண்ண தன் இனத்தைக் கூவி அழைத்துக் கொள்கிறது. மறவாதே.

கல்லைக் கும்பிடுவதா?

உருவ வணக்கம் பல்லாயிரம் வருடங்களாக நமது நாட்டில் நடந்தேறி வந்துள்ளது. ஆதிகாலத்தில் அதற்கு எதிர்ப்பும் இருந்திருக்கிறது. ஆலயத்தில் இல்லை ஆண்டவன் மனதிற்குள்ளிருக்கிறான் என்றும் கூறிவந்தோருமுண்டு. கடவுளே இல்லை சுத்த அபத்தம் என்று நாஸ்தீகம் பேசியும் இருக்கிறார்கள் புராண காலத்தில். ஆனால் பெருவாரியான பேர்கள் மற்ற கொள்கைகளுக்கு எல்லாம் முற்று புள்ளி வைத்து உருவ வணக்கத்தை ஆதரித்ததால்தான் இன்று நம் நாட்டில் எங்கு நோக்கினும் ஆலயங்கள் அமோகமாக காணப்படுகின்றன. அது இந்நாள்வரை குறைவுபடக் காண்கிலோம் பொதுவாக எது எவ்வாறாயினும் அவரவர் கூறுவது அவரவர்கள் கொள்கையைப் பொருத்ததுதான். அதைப்பற்றி எவரும் குறைகூற முடியாது. நமது ஆழ்வாராதியர்களும், நாயன்மார்களும் கூட அவ்விதக் கருத்துள்ளார்க்கு ஒத்தவண்ணமே பாடியிருக்கிறார்கள். **"உளனெனை உளன் இலனெனை இலன்"** என்றும் **"மார்வமென்பதோர் கோவில் அமைத்து மாதவன் என்பதோர் தெய்வத்தை நாட்டி ஆ'வம் என்பதோர் பூவிடவல்லார் அரவதண்டத்திலுய்யலுமாமே"** என்றார்கள். நாம் ஒன்றும் இன்று பகுத்தறிவு கொண்டு புதிதாக சொல்லிவிடவில்லை. ஆகவே இல்லை என்பாரைப் பற்றி நமக்கு கவலை வேண்டாம். வாயால் கடவுள் இல்லை என்று இப்போதுள்ளவர்கள் சொல்லிவிடலாம். ஆனால் துன்பப்படும் சமயம் சமீபத்தில் இருப்பவர்களுக்கு அவர்களின் சாயம் வெளிப்படும். இது பகல் கூத்து.

இந்த பிரசாரம் இப்பொழுது நமது தமிழ் நாட்டில் வெகு வேகமாக நடந்து வருகிறது. ஆனால் ஆலயங்களுக்குப் போகிறவர்கள் குறையவில்லை தமிழா. நாளுக்கு நாள் புதிய ஆலயங்களும், பழைய ஆலயங்களுக்கு கும்பா

பிஷேகங்களும் பல ஆயிரக்கணக்கில் நடந்துக் கொண்டு தான் வருகிறது. ஆனல் நான் இப்படி கூறுவதால் தமிழா! மூட பழக்க வழக்கங்களை ஆதரிக்கிறேன் என்று எண்ணுதே. தீர்க்கதரிசி வீர விவேகானந்தர்கூட விக்கிரஹ ஆராதனைப் பற்றி கூறியுள்ளதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். எழுத்து வாசனையே அறியாத இளஞ் சிறுவனுக்கு "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று எழுது என்ருல் என்ன செய்வான். ஆகவே கடவுள் அரூபமானவர், (ரூபமற்றவர்) ஊருமில்லை, பெயரு மில்லை, ரூபமுடையதுகள் அழியத்தக்கன என்ற கொள்கை களெல்லாம் வேதாந்திகளுடையது; அதை நாம் மறுக்க வில்லை. தேர்ந்தகல்வி அறிவுள்ளவர்களும், ஞானவான்களும் கடவுட்தன்மையை அறிந்தவர்களாக பேசலாம். ஆனல் கீழ்படியில் உள்ள பாமரர்கள் ஏதாவது ஒரு உருவத்தை வைத்து கடவுள் இவர்தான் என்ற நம்பிக்கை பிறந்து அதன் மேல் அறிவு வளர்ச்சியடைந்தால் தானே அந்த நிலைக்கு வரமுடியும். ஏ. என்ற எழுத்தறியாமல் பி. ஏ. பாஸ் செய்ய முடியுமா? வாய் வேதாந்தம் பேசும் சில மேதாவிகள் "**நட்ட கல்லை தெய்வமென்று நாலு புஷ்பம் சாத் தியே சுற்றி வந்து மொண மொனென்று சொல்லுமந்திரமேதடா? நட்டகல்லு பேசுமோ**" என்ற சித்தர் பாடலை தனக்கு சாதக மாக பாடுகிருர்கள். இந்த பாடலை **கல்லு பேசுமோ** என்ற தோடே நிறுத்திக் கொள்கிருர்கள் **நாதன் உள்ளிருக்கையில்** என்று மேல்கொண்டு வரும் பாடலை இவர்கள் பாடுவ தில்லை.

இப்படி இவர்கள் பாடுகிருர்களே இந்த பாடல் பாடினவர் யார்? இவர் கொள்கை என்ன? யாருக்கு இந்த பாடலைப் பாடப் பட்டது? இந்த பாடலின் அர்த்தந் தான் என்ன? என்று கவனிக்கிருர்களா? இல்லை. சதா சர்வகாலமும் பணம் திரட்ட பலரை மோசம் செய்யுங் கருத்தோடு பணத்தின் மீதே கண்ணுயிருக்கும் இந்த

காலத்திய மனிதனுக்கா? அல்லது சதா காம இச்சையை நேமமாகக் கொண்டு கண்ட மாதரைப் புணர்ந்து மக்களை யீன்று உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும் வகை செய்யாது அலையவிடும் இக்காலத்திய மனிதருக்கா? இப் பாடல் பாடப்பட்டது? இதையறிய அவர்களுக்கு ஆற்ற லில்லை. நல்ல படிப்பு ஞானமும், ஒழுக்கமும், தெய்வபற் றும், உணர்வு என்றது இன்னது என்று உணர்ந்தும் கீழ் படியில் இருப்பவர்களுக்கு, மேல்படிக்கு சென்று சொல் லும்செயலும் ஒன்ருய் கொண்ட, துரியநிலையை அடைந்த ஞானிகளாகிய சித்தர்கள் பாடப்பட்டது. இந்த பாடலை வீணே பாமர மக்களிடை அதன் கருத்தின்னதென அறி யாதார் பாடுவது பொருத்தமற்ற செயலாகாதா? தமிழா ஒன்றும் தெரியாத சிறுவர்களையும், பாமர மக்களையும் நாஸ்திகக் குழியில் தள்ளவே வீண் பிரசாரமாகும். இந்த பாடலை பாடுபவர்கள் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேர்வழிகள் நேர்மையற்றவர்களேயாவர். சொல்லும் வண்ணம் செயல்புரிபவர் ஒரு சிலரேதானிருப்பார்கள். அவர்கள் இந்த விதமான பிரயோஜனமற்ற பிரசாரத்தை பாமர மக்களிடையே பரப்பமாட்டார்கள். தனக்கு சாதகமாகக் கொள்ளப் பாடுபடுபவர்கள் நாஸ்தீகர்கள். இவர்கள் சாமியே இல்லை என்று வாதிப்பவர்கள். இந்த உவமானம் சொல்லும் எனது நண்பரொருவர், கோவிலுக் குப் போவதையும் உற்சவங்களையும் பார்த்து எளனஞ் செய்து பேசுவதோடு இந்த பாடலையும் எனக்கு பாடி காட்டுவார். நான் எவ்வளவு ஆதார பூர்வமாக சொல்லி னும் கேளார். இப்பேர்பட்ட பேர்வழி ஒரு சமயம் நான் கோவிலுக்குப் போயிருந்தபோது என்னை காண நேர்ந்து விட்டது. நானும் அவரை பார்த்துவிட்டேன். மறைய முடியவில்லை.

"நான் கேட்டேன் என்ன நண்பரே கடவுள் நம் பிக்கை உண்டாகி விட்டனவா மனையாளோடு வந்து விட்

டரே! என்றேன் குத்தலாக. அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நான் கோவிலுக்கு வரமாட்டேன் ஸார். இந்த பைத்தியம்(மனைவி) இருக்கிறதே இதன் தொந்தரவு பொறுக்க முடியவில்லை. அதனால் தான் வர நேர்ந்தது என்றார். உடனே அவர் மனைவி இல்லை இல்லை. அதெல்லாம் சுத்த தவறு. நான் வீட்டிலும் எல்லா பண்டிகைகளையும் கொண்டாடுகிறேன். இவரும் அதில் சம்பந்தப் பட்டவரே! சும்மா வாய் வீச்சுதான்; என்று அம்பலப் படுத்தினார் அந்த அம்மையார். இப்படி அநேகம் பெயர் வழிகள் நம் நாட்டில் மலிந்துக் கிடக்கிறார்கள். ஏன் எனக்குத் தெரிந்த வரையில் இந்த பிரசாரம் செய்துவரும் பெரிய தலைவர்களும் மறைமுகமாக இப்படித்தான் நடந்துக்கொள்கிறார்கள். பத்திரிகையிலும் நீங்களும் கண்டு வருகிறீர்கள்.

தமிழா! தாய்க்காக, மனைவிக்காக, மற்ற சுற்றத்திற்காக என்று கூறிக்கொண்டு கோவிலுக்குப் போகிறவர்கள், மற்ற காரியங்களைச் செய்பவர்கள் ஏன்? இந்த வாய் வேதாந்தம் பேசவேண்டும். தன் மனைவியை திருத்த முடியாத இவர்கள் ஏனையோரை எங்ஙனம் திருத்த முடியும். "**வாய்ச் சொல்லில் வீரரடி கிளியே வகையறியாரடி**" என்று பாரதியார் பாடினது பொய்யல்ல. முற்றும் உண்மையே. பகுத்தறிவு என்ற போர்வையில் நாஸ்தீகம் பேசும் நண்பர்களை தமிழா நீ நம்பாதே.

திரையில் தெய்வங்கள்

நமது நாட்டு தெய்வங்கள் இன்று படத்தில் படும் பாடு சொல்லி முடியாது. தெய்வத் தன்மையை கேவலப் படுத்தி ஆபாசக் கடவுள்கள் என்ற கருத்தோடு படங்கள் பிடிக்கப்படுகின்றன. ஆண்டவன் உண்டு என்ற ஆழ்ந்த கருத்துக்கொண்டிருக்கும் தமிழனின் மனதை மாற்றுவதற்காக சீர்திருத்தம் என்னும் பெயரால் கடவுள்

பெருமையை இழிவுபடுத்திய கதைகளை பட முதலாளிகள் வாங்கி படம் பிடித்து நாஸ்தீக கொள்கைக்கு ஆக்க மளித்து விடுவதோடு தனிப்பெருமையு மடைகிறார்கள். ஏன்? சீர்திருத்தப்படம் எடுத்துவிட்டோம் என்ற மனப் பிரேமையால் மகிழ்கிறார்கள்.

கடவுள் செயலிலும் குறைபாடுகளிருப்பதாக கற் பனைக் கதைகளை காணும் பாமர தமிழன் கடவுள் இப்படி யுமா நடந்தார் என்று மலைத்து மனம் மாறுதல் அடை கிறான். நாளடைவில் நாஸ்தீகம் பேச ஆரம்பித்து விடு கிறான். கடவுள் பொய், வேதம் பொய், புராணம் கட்டு கதை, இவையனைத்தும் ஆரிய புரட்டு தள்ளு குப்பையில் என்ற மனோ நிலையை அடைகிறான். அதோடு சர்வம் சந்தேகமயமாகி விடுகிறான். தனக்குப்பின் பிறந்த தங்கை தனது சகோதரிதானா? என்ற ஐயமும் ஏற்பட்டு விடு கிறது. பாவமேது, புண்யம் ஏது என்றுகூட பேசுகிறான், இந்தவிதம் பேசுவர்கள் ஆரம்பப் பள்ளியில் வாசிக்கும் சிறுவர்களே.

ஓய்ந்த நேரத்தில் மக்கள் நல்ல விஷயங்களை கேட்டு களிப்பதற்கு காலக்ஷேபங்களும், நாடகங்களும் பண்டை கால தமிழர்கள் உண்டாக்கினார்கள். அதற்கென ஒரு தனித்தமிழும் (நாடகத் தமிழ்) ஏற்படுத்தினார்கள். நாட கத்தின் மூலம் புராணங்களையும், கற்பனைக் கதைகளையும் நடித்துக் காட்டி நல்லறிவு புகட்டி வந்தார்கள். அதன் பயனாக மக்கள் தன்னடக்கம், தெய்வபக்தி, பெரியோர் களுக்குக் கீழ்படிதல், ஆசிரியரிடம் அன்புக்கொள்ளல், அன்னை தந்தையரிடம் பணிவாயிருத்தல், நாட்டின் மீது நாட்டங்கொள்ளல், கொல்லாமை போன்ற உயரிய குணங்களை மேற்கொண்டு சீரிய வாழ்வு வாழ்ந்தார்கள். கால மழையும் நேர்மையாய் பொழிந்தன. நாடக மூலமும் பக்தி செலுத்தலாம் என்ற கருத்துடன் "**நாடகத்தால் உன்னடியார்போல்** என்று பாடியிருக்கிறார் நாயனார்.

உலகம் போற்றும் உத்தமர் **மகாத்மா காந்தியடிகள்** கூட **"நான் அரிச்சந்திர நாடகம் பார்த்த பிறகுதான் சத்தியத்தை எப்படி காப்பது என்று உணர்ந்தேன். சத்தியத்தில் நம்பிக்கை தந்தது அரிச்சந்திர நாடகந்தான். பிரஹலாதன் நாடகம் பார்த்து சத்தியாக்கிரஹத்தின் தன்மையை உணர்ந்தேன்"** மறந்தும் பொய் சொல்லா புனிதன் துணிந்து கூறியிருக்கிறார். நன்மனதுடைய நல்லோர் நன்மையை தான் காணுவார்கள். குறையை தள்ளுவார்கள். புராணங்களில் குற்றமில்லை என்று நான் கூறவில்லை. ஒரு சில குற்றங்கள் இருக்கத்தான் இருக்கின்றன. ஆகவே தமிழா எல்லாம் தவறு என்று கூறி விடலாமா? மனிதனுடைய நல் வாழ்வுக்கு எவ்வளவோ சீரியகொள்கைகள் நமது இதிகாசங்களில் மலிந்துக் கிடக்கின்றன. ஆனால் பழயன தமிழனுக்குப் புளித்து விட்டது போலும். முற்போக்குள்ள ஒரு வகுப்பாரைக் கண்டு ஆத்திரங்கொண்ட நாம் தெய்வங்களின்மீதும், புராணங்களின்மீதும் குறைகூறி வருகிறோம். இது இயற்கை. இதைத் தான் திருத்திக் கொள்ளவேண்டும்.

நாடகக்கலை இன்று நலிந்து விட்டது. அது என்று புத்துயர் பெறுமோ யார் கண்டார்கள். இப்போதுள்ள ஒரு சில நாடக கம்பெனிகளுக்கும் பகுத்தறிவு வாசனை புகுந்து வீசுகிறது, ஒழிக ஒங்குகிறது, வகுப்புவாதம் தலை காட்டுகிறது.

அரசாங்கத்தார் படத்தில் கடவுளை அவமதித்து கட்டங்கள் பிடிப்பதை தடுப்பதற்காக சட்டஞ் செய்ய யோசனை செய்கிறார்கள். ஆனால் அது நன்மை பயப்பனவாக யிருக்க வேண்டும். கடவுளை அவமதித்து படம் எடுக்கிறார்கள் என்பதற்காக புராணங்களை படமே எடுக்க கூடாது என்று தடை செய்வது நன்றன்று. **"கருநாகம் புகுந்த வீட்டை கனல் மூட்டி எரிப்பது" போலாகும்.** அதனால் நமது மதவுணர்வும் கெடும் என்பதை கவனிக்க வேண்டும். ஏன்? தவருக எடுத்தால் தணிக்கை போர்டார் படத்தைத்

தள்ளி விடலாமே. விழிப்புள்ளத் தமிழன் வீறு பெற்றெழுந்தால் வெற்றி பெறலாமே.

"தேர்ந்த கல்வி ஞான மெய்தி வாழ்வோமிந்த நாட்டிலே"

கடவுள்

அந்தர்யாமியான கடவுள் யாவருக்கும் எளிதில் காணக்கூடியவரன்று. எந்த மதமும் கண்டதாகக் கூற நாம் காணவில்லை. கடவுள் ரூபமற்றவர், பெயரில்லாதவர் எவரும் இதைப் புதியதாகச் சொல்லி விடவில்லை. பகுத்தறிவாளர்கள் தான் கண்டு கூறுகிறார்கள் என்று நாம் நினைக்கக் கூடாது. இதை வேதங்களும் முறையிடுகின்றன. "கண்ணனும் கீதையில் அந்தர்யாமியான" நான் என்று தான் கூறுகிறான். ஆழ்வார் திருமங்கை மன்னனும் "உணர்வு எனும் பெரும் பதம் தெரிந்து நாடினேன்" என்று கூறுகிறார். உணர்வு என்றது கடவுளாகிறது. அறிவே தெய்வம் என்றும் சொல்லப் படுகிறது. நம்மாழ்வார்கூட "யாவரும் எவையும் தானாய் அவரவர் சமயந்தோறும் தோய்விலன் புலனைந்திற்கும் சொல்லப்படா உணர்வின் மூர்த்தி ஆவிசேர் உயிரினுள்ளான் யாதுமோர் பற்றில்லாத பாவனை அதனைக்கூடி அவனையுங் கூடலாமே" என்று கூறுகிறார். ஆகவே கடவுள் எந்த சமயப் பற்றும் இல்லாதார் என்பது புலனாகிறது. அருள் சுடர் வள்ளலார் கூட "எம்மதமும் சம்மதம் என்றேதான் கூறி இருக்கிறார். ஏன் நமது மதத்திலில்லாத கொள்கைகளை, வழிகளை வேறெந்த மதமும் கூறிவிட வில்லை. இந்து மதத்திலிருந்தே தான் புற மதங்களும் கொள்கைகளை வகுத்துக்கொண்டன.

நமது நாட்டில் பல்வேறு பாஷை பேசுகிறவர்களுமிருக்கிறார்கள். பல்வேறு ஜாதியினருமிருக்கிறார்கள். அவரவர்கள் மனத்திற்கு ஒத்தபடி கடவுளுக்கு நாமங்களை

நியமித்துக் கொண்டு வணங்கி வருகிறார்கள். அவரவர் உள்ளத்தானாகிய சுத்தான்மாவே அவரவர் தெய்வமாகும் அன்பு, அறிவு, தொழில் எல்லாம் அந்த உணர்விலே மலர வேண்டும்.

உலகில் அன்பு செய்யக் கூடிய ஒரே பொருள் ஒவ்வொருவருள்ளும் ஜீவ சாட்சியாக மிளிர்கிறது. அந்த சுத்தான்மா தான் கடவுள். பதியன்பே மெய்யன்பு. பாச அன்பு பொய்யன்பாகும். அன்பிற்குக் கட்டுப் பட்டவன் தான் ஆண்டவன்.

இறைவன் பாராலயன்; உலகைக் கோயிலாகக் கொண்ட விஸ்வ மூர்த்தி. அருமையான உயிர் குலங்களுக்கெல்லாம் அவனே உயிராக நிற்கிறான். எங்கெங்கே பார்த்தாலும் அங்கங்கே இவ்வண்ணம் உயிருக்குயிராய், பாரான்மாவாய் நின்று நடமாடுகிறான். எல்லார் உள்ளும் நானே இருக்கிறேன் என்னையன்றி எதுவுமில்லை என்கிறான் " கண்ணன் கீதையில் "

தமிழா " உலகம் பொய்யா, மெய்யா?" என்று பேசிக் காலத்தை வீணாக்காமல், வந்த வினையை அறிந்து நிறைவேற்றிப் பூரணமாக்குவதே மாந்தர் கடன். ஆருயிர்க்கு அன்பு செய்யின் ஆண்டவன் அன்புதானே கிட்டும். " அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்ப நிலைதானே வந்து எய்தும் பராபரமே" என்று தாயுமானவரும் கூறியதை தமிழா நீ எண்ணிப் பார். நற்பணி செய்ய முற்படு தமிழா. உலகம் உன்னைப் போற்றும்: அன்பு நீர் வார்த்தால் அருள் மலரும், மாசற்ற அன்பினால் மனம் பரமனிடம் ஒன்றுபடும்.

பாட்டாளிகள்

தோழர்களே! பாட்டாளிகளாகிய நாம் கூட்டாளிகளாக இருந்தால் தான் வருங்காலத்தில் நம்முடைய வாழ்க்

கைத்தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும். நாம் ஒற்றுமை பட்டிராவிடில் ஒரு கூட்டத்தாருக்கு அடிமைப் பட்டு அவர்கள் காலடியில் கிடக்க வேண்டியவர்களே! கட்டாயம் கிடக்கத்தான் வேண்டும்; அதிலொன்றும் சந்தேகமே கிடையாது. எந்த கக்ஷியை நாம் நம்பினுலும் அவர்கள் நம்மை ஆதரிக்கப் போவது கிடையாது. அவர்களுடைய நலனுக்கு நம்மை பயன் படுத்திக் கொள்வார்களே யன்றி, நம்முடைய தரத்தை உயர்த்த அணுவளவும் பாடுபட மாட்டார்கள். அதை நாம் இன்றளவும் கண்கூடாகப் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம். முக்கியமாக நம்மை அவர்கள் கக்ஷி நலனுக்கே பயன் படுத்திக் கொண்டு பிற கக்ஷியாரோடு மோத விடுகிறார்கள்.

இப்படி அரசியல் காரணங்களுக்காக தோழர்களை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொண்டு அவர்கள் காரியங்களை சாதித்துக் கொள்வதோடு நம்மையும் திண்டாட விடுகிறார்கள். இதையறிகிருனு தமிழன்? இன்று தோழர்களாகிய நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை எந்த தமிழ் தோழனுவது சற்று சிந்திக்கிருனு? கிடையவே கிடையாது. தோழர்களாகிய நமக்கு, பாட்டாளிகளாகிய நமக்கு ஏனப்பா கக்ஷி பேதம். அதோடு கூட தோழன் ஜாதி பேதத்திலேயும் தாண்டவமாடுகிறான். பாட்டாளி பாஷை பேதத்திலும், ஜாதி பேதத்திலும் நாட்டங் கொள்வானுகில் அவனுடைய வருங்காலம் இருளடைந்து விடும். ஒற்றுமையும் ஏற்படாது. தோழா! சிந்தனை செய்து பார்

பாட்டாளிகளாகிய நாம் இன்று எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை சிந்தனை செய்கிறோமா? இல்லை; முக்காலும் இல்லை. எத்தனை கக்ஷிகளின் கைப் பொம்மைகளாக இருக்கிறோம். பாட்டாளிகளாகிய நாம் நம்முள்ளேயே குரோதத்தை, சாதி சண்டையை, பாஷை வேறுபாட்டை வளர்த்து வந்துள்ளோம். பரஸ்பரம் ஆலைத் தொழிலாளி

அச்சுத் தொழிலாளியை நம்புவதில்லை. ரயில் தொழிலாளி ஆலைத் தொழிலாளியை நம்புவதில்லை. ஏன்? நாமாகவா இந்த நிலைமைக்கு வந்தோம்? இல்லை. வேறு கக்ஷித் தலைவர்களை நமக்கு தலைவர்களாக அமைத்துக் கொண்டதால் நம்மை அத் தலைவர்கள் இதர தோழர்களோடு சேர விடாது மடக்க நமக்கு துவேஷத்தை ஊட்டி விட்டார்கள். இந்த வலையில் வீழ்ந்ததற்கு காரணம் நமக்குப் போதிய கல்வி யறிவு இல்லாததே யாகும்.

தோழரே! நம்மிடையில் இன்று எத்தனை கக்ஷிகள் இருக்கிறது. சற்றே எண்ணிப் பார். ஒரு பக்கம் "கம்யூனிசம்" மற்றோர் பக்கம் சோஷலிசம், இன்னும் மொரு பக்கம் "கருஞ் சட்டை" அதற்கு அடுத்து "ராயிஸ்டு" "காங்கிரஸ்" ஆக தோழன் இத்தனை கக்ஷிகளின் வலையில் சிக்குண்டு தவிக்கிறான் மறுக்க முடியுமா? தமிழா! இப்படி இவர்கள் வலையில் சிக்குண்டு கிடப்பதால் நமது நலன்கள் பாதிக்கப்படுகின்றன என்பதை எந்த தோழன் சிந்திக்கிறான். கிடையவே கிடையாது.

பெருவாரியாக நமது நாட்டில் கம்யூனிசம் தான் பல தோழர்களின் சங்கங்களைக் கைப் பற்றிக் கொண்டுள்ளது. ஆயினும் அது தோழர்களுக்காக பாடு படுவது போன்று தோன்றுமே தவிர உண்மையில் அவர்கள் நாட்டம் எல்லாம் ரஷியாவிற்கு (சோவியத்திற்கு) நம் நாட்டை அடிமைப் படுத்தவே தான் அவர்கள் நம்மை கருவிகளாக வைத்துக் கொண்டு வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் அங்ஙனம் செய்வதால் பாட்டாளி பலனடைய மார்க்க மில்லாது. தோல்வி யடைகிறான். இன்று நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் கம்யூனஸத்தின் போக்கு வெட்ட வெளிச்சமாகும். சீனாவைப் பாருங்கள் சுதந்திரமாக விருந்த அந்த நாடு இன்று செங் கொடிக் கீழ் வருகிறது. ரஷியக்கண்ணும் அதன்மீது

பூரணமாக பாய்ந்து விட்டது. இந்த கொள்கையைக் கொண்ட ஒரு கக்ஷியின் கீழ் அகப் பட்ட நாம் அதற்கு முற்றும் ஆதரவு தருகிறோம். இருநூறு வருடங்களாக அடிமைப் பட்டுக் கிடந்த நாம் மறுபடியுமா வேறொரு அன்னியனுக்கு அடிமைப் பட வேண்டும். சோஸலிசமும் கொஞ்சம் சங்கங்களைக் கைப் பற்றியுள்ளது அதைப் பற்றி நாம் குறை கூற முடியாது. ஆனல் பல வேறு கக்ஷிகளுக்கு நாம் ஆளாகியிருக்கக் கூடாது என்பது தான். ஏதாவது ஒரு கக்ஷி தான் தோழர்களுக்குத் தேவை. தோழன்! "ஒரே கக்ஷி" "ஒரே கொடி" "ஒரே கொள்கை" யுடையவனுக யிருந்தால் வருங்காலத்தில் பாட்டாளி ராஜியம் காணலாம். உலகம் போற்றும் உத்தமர் "மகாத்மா காந்தியடிகள்" கூட ஒரு பரம தொழிலாளி நாட்டை யாளவேண்டும் என்று கூறியுள்ளார். இந்த எண்ணம் எந்த கக்ஷிக்கும் கிடையா தென்பதை திட்ட வட்டமாக துணிந்துக் கூறலாம்.

முக்கியமாக நாம் இன்னென்றிலும் கண்ணுங் கருத்துமாக யிருக்க வேண்டும். தோழா! நீ தனிச் சலுகை நாடாதே. எந்த ஒரு தனி தோழனும் தன் சுய நலத்திற்கென சம்பந்தப் பட்ட முதலாளியிடம் தொடர்பு கொண்டு சலுகை நாடக்கூடாது அது உன் கக்ஷியை க்ஷீண நிலைக்குக் கொண்டு வந்து விடும். அதனல் நலனை வெற்றிகரமாக அடைய தடைப்படும். ஏதோ முதலாளி தரும் சொற்ப ஊதியம் அந்த வேளைக்கு அணு குணமாக யிருக்கும் அதனல் நன்மையில்லை.

நாம் பல் வேறு கக்ஷிகளாயில்லாது ஒரே கக்ஷியின் கீழ் பணி செய்தால், தோழர்கள் அத்தனை பேரும் ஒரு மனமுடையவர்களாய் இருப்போம். அப்பொழுது வருந் தேர்தல்களில் நமது பிரிதிநிதிகளை நிறக வைக்கலாம். சட்ட சபைகளை கட்டாயம் பிடிக்கலாம். நாளா வட்டத்தில் நமது

ஆட்சியும் காணலாம். ஆனால் இவையனைத்தும் தோழன் ஒன்று படுவதிலே தானுள்ளது. அது என்று காண்போமோ இறைவன் தான் அறிய வேண்டும். இன்று இங்கிலாந்தில் அந்த நிலையில் இருப்பதால் தான் அவர்கள் கக்ஷி இன்று அங்கு பாராளுகிறது.

எல்லாவற்றிற்கு மேலாக சில தோழர்களுக்கு இன்று பகுத் தறிவு என்று ஒரு கொள்கை புகுந்துக் கொண்டுள்ளது. பகுத்தறிவு வேண்டியது தான்; அதை எவரும் மறுக்கவே முடியாது. ஆனால் அந்த பகுத்தறிவு பண்புடையதாகயிருக்க வேண்டும். அது தான் பாட்டாளியின் பணிக்கும் பயனளிக்கும். துவேஷப் பகுத் தறிவு நம் ஒற்றுமையைக் குலைக்கும். அதனால் நம் முதலாளிகள் நம்மை குதிரை சவாரி செய்வார்கள். உண்மைத் தமிழ்த்தோழனுக்கு ஜாதி துவேஷமே கூடாது. நமக்கு வேண்டியது தொழிலில் ஒற்றுமைத் தான் அவசியம். நமது மேடை மீது துவேஷ பிரசாரம் செய்யும் நேயர்களுக்கு தோழர்கள் சீட்டு கொடுத்தாலன்றி நாம் ஒற்று வாழ இயலாது. இதை முற்றுமறிய வேண்டும் பாட்டாளி.

தோழனே நீ காலை ஆலை வாயிலை அடைந்த வுடனே எத்தனை பாஷை பேசும் பாட்டாளியைப் பார்க்கிறாய். பாஷை துவேஷம் வைத்துக் கொண்டால், சாதி சண்டை வைத்துக் கொண்டால் எங்ஙனம் ஒரு கையாக நீங்கள் நிற்க முடியும். தங்களுக் கிடையில் வேற்றுமை வளர்ந்து ஒற்றுமை தானே குலையும். அதை இன்று நீங்கள் நிதரிசனமாகக் காண்கிறீர்களே. ஆகவே அகற்றுங்கள் இன துவேஷத்தை. அப்பொழுது தான் பரஸ் பரம் நம்பிக்கை பிறக்கும். அதன் பலனாய் நமது குறைகளை போக்கிக் கொள்ளலாம். உணர் வடைந்து விழிப்புக் கொள் தமிழா.

" உழவுக்கும், தொழிலுக்கும், வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை, நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்—மேலும்
வீணருக்குழைத் துடலம் வோய மாட்டோம் "

—பாரதியார்.

நமது கல்வியும், பயனும்

நமக்கு வேண்டுவது முக்கியமானது கல்வியறிவு. ஒவ்வொருவரும் அவசியம் கல்வி கற்க வேண்டும். கற்றபடி ஒழுகுதலும் மிக மிக அவசியம். இல்லையேல் கற்றதினுல் பெருமையுமில்லை. "உலகத்தோ டொத்தல் ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலாதாரே" என்று வள்ளுவரும் கூறி யிருக்கிறார். கற்படி ஒழுகுபவனே கல்விமான். கற்றும் அதன் வழி நில்லாதான் படித்த முட்டாள் ஆவான். கல்வியை தமிழா வாழ்வில் காட்ட வேணடும். 'வேதம்' படித்தும் வேசிக் காதலும், 'தேவாரம்' படித்தும் திருட்டுப் புத்தியும், 'குறள்' படித்தும் குடி, பொய், சூதும், 'பைபிள்' படித்தும் படுகொலை மோசமும், 'தாயுமானவர்' படித்தும் தன்னல செருக்கும், 'பிரபந்தம்' படித்தும் உருகா நெஞ்சமும் கொண்டவன் ஆற்றுக்குப் போயும் சேற்றில் குளித்தவனுவான். அறிவிற்கழகு அனுஷ்டானமேயாம்.

தமிழா நீ "அறஞ் செய விரும்பு" என்று படித்து விட்டு, அறஞ் செயா இரும்பா யிருந்தால் பயன் என்ன? அங்ஙனம் அருள் இல்லா நெஞ்சில் மனப்பாடத்தால் அடைப்பட்ட புத்தகக் குப்பைகளெல்லாம் பொருளற்ற, பயனற்ற வெற்றுரைகளேயாம். அப்பனே வாயினுல் வைத்தியம் என்று சொல்லி விட்டால் நோய் தீர்ந்து விடுமா? சிந்தித்துப் பார். மனிதன் கடவுட் தன்மை பெற உற்ற துணையாவது 'அருள்.' அருளே புத்தர். அருளே மகா வீரர். அருளே கிருஸ்து. அருளே 'நம்மாழ்வார்' அருளே 'நபிநாயகம்' அருளே 'காந்தி'. கடவுள் அருள் வடிவாகவே நம் முன் உள்ளான். அருளை நாடி, அருளைத் தேடி, அருளைப் பாடி, அருளைக் கூடி அவ்வருளால் அடைவதே தான் 'இன்பம்.' அறிவு உணர்வு அளிக்காத நூல்களெல்லாம் வெறும் நூல்களே.

தமிழா! நாம் எத்தனைப் புத்தகங்களை வேண்டுமானாலும் உருப்போட்டுப் படித்துத் தள்ளி விடலாம்; அது பெரிதல்ல. ஆனால் புலன்களை அடக்கி ஆளுவதே மகாக் கடினமான வேலை. நாம் மனப்பாடத்தால் கலகல வார்த்தைகளைக் கொட்டி விடலாம். அவன் பேச்சுக்கடை போடுபவனேயாகும். இன்று திரையில் கூட பேச நாம் கேட்கிறோம். கிராம்போன் கூட ஊசி இட்டால் பேசுகிறது. அது பேசி பயனென்ன? மனமடங்காது, புலனை வெல்லாது வாய் முழக்கம் செய்பவன் புலவனல்ல. அவன் புத்தகப் படிப்பாளி. ஓதுவதை விட ஒழுக்கம் மேலானது நரப்பறையினும் நன்னடக்கம் உயர்ந்தது.

அச்சு யந்திரம் எத்தனையோ பாஷைகளில், எண்ணில்லா நூல்களை, பத்திரிகைகளை அடித்துத் தள்ளுகிறது. அதன் பொருளையறியுமா அந்த அச்சு யந்திரம்? அத்தன்மை போன்று பகுத்தறிவு பெற்ற மனிதன் நடந்து கொள்ளல் நலமன்று. நல்லற நூல்களையே பயில்க! பயின்றதை சிந்தித்திடுக! அதன்படி வாழ்ந்து பயன் பெறுக; உள்ளம் திறக்கப் பயில்க; உள்ளமே அறிவின் ஊற்று. அருட் புலவர் நூல்களை படித்து உன்னியுன்னி மனத்தை மலர வைக்க வேண்டும். மலர்ந்த மனம் மாண்படையும்.

வெறும் படிப்பு மட்டும் நற்கல்வியாகாது. கற்றபடி ஒழுக வேண்டும். கல்வியுடன் வாழ்வும் இணைய வேண்டும். வாழாக் கல்வி வாழா பெண் போன்றது. கல்வியும் அதன் வழி வாழ்வும் சேர்ந்தால் உலகம் எல்லாச் செல்வப் பொலிவு மெய்தும். மங்கல வாழ்வும், வாய்மையும், தூய்மையும் அளிப்பதே உண்மைக் கல்வியாகும்.

> "கற்கக் கசடற கற்க கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

0-, 6 NAY3, T
N49

அன்பு

தமிழா நீ என்றும் அன்புள்ளவனாகவே விளங்கு. அன்பே தான் தெய்வம். அன்பே அறிய சமய நெறி. அன்பே தான் அறிவிற்கு அழகு. அன்பினால் தான் காதலும், கவர்ச்சியும், விருப்பமும் உண்டாகின்றன. அன்பின் பிறப்பிடம் உள்ளம். மனைவி விரும்புவது மணாளனுடைய அன்பையே, மணாளன் விரும்புவது மனைவியினுடைய அன்பையே. அன்போடழைத்தால் அறியாக் குழந்தையும் தென்புடன் வந்துத் தாவி விளையாடும். அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை. உள்ளத்தில் அன்பிருந்தால் காட்டு வழியே போகும் போதும் அச்சமில்லை. அக் காட்டிலுள்ள மிருகங்களும் அன்பிற்கு இணங்கும். மனதில் அன்பிருந்தால் தம்மையே காண்பர்.

தமிழா! அன்பினால்! கடுமனக் கள்வரும் பணிவர். அன்பினால் தாங்கும் சுமையும் இலேசாகும். காடு மலைகளில் தவம் புரியும் யோகிகளை பாம்பு, புலி, நரி, சிங்கங்களும் தீங்கு செய்வதில்லை. அன்புறவு கொண்டிருந்தால் புட்களும் குரங்குகளும் அருகே வந்து விளையாடும். கூலிக்கு சுமக்கும் மூட்டைக்கு அளவு உண்டு, அன்பிற்கு சுமக்கும் மூட்டைக்கு அளவு இல்லை. அதற்கு தனிப் பெருமையுண்டு. பகைவனுடைய உள்ளத்தையும் அன்பு இளகச் செய்யும். "பிரஹலாதனும்" அன்பினால் அறத்தை அடைந்தான். மகாத்மா காந்தியடிகள் கூட அன்புள்ள பொறுமையால் வந்த இடர்களை எல்லாம் தாங்கி வெற்றி பெற்று உயர்வடைந்தார்.

தமிழா எல்லா செல்வமும் ஈடில்லாது பெற்று வடிவழகில் மிகுந்துமிருக்கலாம். பலம், புகழ், பட்டம், பதவி எல்லாம் பெற்றவனாகவும் இருக்கலாம். ஆனால் மனம் கருங்கல்லாயிருக்கும். அன்பு இல்லாதவன் பொருள் உதவாது.

TAMIL NADU ARCHIVES
105747

சுயாச் செல்வன் இருந்தும் ஏழையே தான். புகழ் படைத்தவனாக யிருக்கலாம். ஆனால் பிறரை மதியாச் செருக்கும் சுய நலமும் இருப்பின் புகழ் பெற்று பயனில்லை. செருக்கடையும் புகழ் சறுக்கிவிழும். தமிழா உதட்டில் அமுதமும் உள்ளத்தில் நஞ்சுமா யிருப்பவரை நீ நம்பாதே. ஏழையாயிருப்பவன் பெரிய பொதுநல வீரனா யிருப்பான். உடல் சிறியதாய் இருக்கலாம் அதில் ஒரு மகாத்மா குடி கொண்டிருக்கலாம். வெளித் தோற்றத்தால் ஒருவனை நாம் மதிப்பிட முடியாது. உள்ளன்பையும் அதனால் வளரும் அன்புச் செயல்களையுங் கொண்டே தான் ஒரு ஆளை மதிக்க வேண்டும்.

தமிழா! நீ எப்பொழுதும் அன்புடையவனாயிரு. பகைவனை அன்பால் திருத்து. வசைமாரி பொழிந்து வசப்படுத்த முடியாது. நாம் எவ்வளவு தூற்றுகிறோமோ அவ்வளவு அவர்கள் ஏற்றமடைவார்கள். தாய் தன்னுடைய குழந்தையை உள்ளன்போடு நேசிப்பது போலவே தூய அன்பையே அனைவரிடமும் காட்டு. தன்னவர் அன்னியர் என்ற பாகுபாடு கொள்ளாதே.

ஒழுக்கம்

தமிழா! நீ ஒழுக்கத்தில் சிறந்தவன் என்ற நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தமிழில் ஒரு பழமொழி உண்டு "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" அது உண்மைதான். ஒரு மனிதனை அவனுடைய முகத்தைக் கண்டே அவன் குணம் இன்னது என்று கண்டு பிடித்து விடுகிறார்கள். இது மிகையாகாது. மனம் கோண முகம் கோணும். மனம் மலர முகம் மலரும். மாசில்லாத மனமானது பளிங்கு கண்ணாடி போன்றதாகும்.

தெய்வ பக்தி, பெரியார் பரப்பும் உண்மையொளி, உண்மையான நடத்தை இந்த மூன்றிலேதான் சன்மார்க்

கம் பரவும். கடவுளை மறுப்பது தன்னையே மறிப்பதாகும். தெய்வ நிந்தனை செய்யாமல், தெய்வத் தன்மையுள்ள பெரியாரை எதிர்த்து வாதாடாமல், பொய் சொல்லாமலிருந்தால் அவனுக்கு புகழ் உண்டாகும். நான் என்ற அகம்பாவம் ஒழிய வேண்டும். அது ஒழிந்தால் அருளைப் பெறுவான்.

பொய், களவு, சூது, வஞ்சனை, ஆசை, ஆணவம், தன்னலம், பகை, காமம் முதலியன தலை எடுக்காதபடி அடக்க வேண்டும். "ஒழுக்கம் உயர்வளிக்கும்" என்ற மூதோர் சொல்லை உள்ளத்தே வை; உலகம் உன்னைப் புகழும்.

நம்பகமின்மை

அப்பனே கற்பனை என்பதை நம்பிய நீ கடந்த கால நிகழ்ச்சிகளை எவ்விதம் நம்புவாய். நமது சாஸ்திரங்களில் உள்ள ஒரு சில தவறுகளை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டு முற்றும் புரட்டு என்று சொல்வது அதிசயமில்லை. ஆனால் வருங்காலத்தில் தமிழன் உன்னைப் போலவேதான் கடந்த கால சம்பவங்களை நம்ப மாட்டான். இன்று நம் கண் முன்னே நிகழ்ந்த சம்பவங்களை சரித்திரக்காரர்கள் எழுதி வைத்தால் அந்த வாலிபர்கள் நம்பப் போவதில்லை. இன்று நமது நாட்டில் சுதந்திரப் போர் நடந்தது. யாராவது நமக்கு சுதந்திரம் வரும் என்று எண்ணினார்களா? இல்லவே இல்லை. பெரிய தலைவர்கள் கூட நம்பவில்லை. என்? எதிரியின் பலம் அவர்களை அச்சப்படச் செய்து விட்டது. சத்தியாக்கிரஹ வெத்து வேட்டினால் சுதந்திரம் பொத்தென்று விழுந்திடாது என்று வெளிப்படையாகக் கூறியவர்களுமுளர். என்னவோ காந்தி சொல்கிறார் அதற்காகவேனும் வேலை செய்வோமே அதற்கு மேல் கடவுள் விட்ட செயல் என்று நினைத்தவர்களுமுண்டு.

அருள் மழைப் பொழிந்து அண்ணல் காந்தியடிகள் நம்மைக் கூட்டிக் கொண்டு சாத்வீகப் போர் தொடுத்து சுதந்திரம் வாங்கித் தந்தார். அடிகளின் இருபத்தெட்டாண்டு முயற்சி வெற்றிப் பெற்றது. 1919-வது ஆண்டு முதல் 1947-ஆம் ஆண்டுவரை நடந்தவைகளை சரித்திரக்காரர்கள் எழுதி வைத்தால், புராண காலத்தைப் புரட்டு என்று கூறும் புண்ணியவான்கள் போலவே எதிர் காலத்திலும் ஒரு கூட்டம், ஏன் ஸார் இது உண்மையா? நீங்கள் நம்புகிறீர்களா? நான் என்னவோ நம்ப மாட்டேன் ஸார்; பகுத்தறிவுக்கு அது ஒத்ததல்லவே, நீங்களே யோசித்துப் பாருங்கள். விஞ்ஞான ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்றவர்கள்; ஆகாய விமானம் என்ன, அணுக்குண்டுகளென்ன, சப்மெரின்களென்ன, பெரிய பெரிய பீரங்கிகளென்ன இவ்வளவு போர் சாதனங்கள் வைத்திருக்கும் இந்த காலத்தில் ஒரு அரை நிர்வாணி ஒரு வித ஆயுதமின்றி சீமைத் துணியைக் கொளுத்தியும், உப்பைக் காய்ச்சியும், கள்ளுக்கடை மறியல் செய்தும், சட்டத்தை மீறியும், சிறைப்புகுந்தும், கதர் அணிந்தும், பட்டினி யிருந்தும் அன்னியனை மிரட்டினல் பயந்து விடுவானு? பொசுக்கி விட மாட்டானு? இந்தியர் கையில் என்ன இருக்கிறது பாதுகாத்துக் கொள்ள. சொல்லுகிறவர்கள் சொன்னலும் கேட்கிறவர்களுக்கு புத்தியிருக்க வேண்டாமா? என்பான். நாமும் ஆமாம் போட வேண்டியதுதான். இல்லை என்ருல் மல்லுதான் வரும்.

ஆகவே நம்புகிறவர்கள் என்றைக்கும் நம்புவார்கள். நம்பாதவர்கள் எப்பொழுதும் என்ன சொன்னலும் நம்பமாட்டார்கள். தமிழா அகங்காரம் அற்ற அறிவால் அனைத்தும் அடையலாம் அது தான் உண்மை;

அறம்

தமிழா! மனிதனுக்கு கடமைகள் இரண்டு இருக்கின்றன. முதலாவது ஒன்று, தான் பூரணம் அடைதல். மற்றொன்று தன் இனத்தவராகிய மனித சமுதாயம் பூரணம் பெறச் செய்தல். இவ்விரண்டும் நிறைவேற்றத்திற்கு ஏற்ற ஒழுக்காறே சன்மார்க்கம். இதுவே அறம் எனப்படும். மனிதனிடத்தில் உள்ள மன மாசுகளைத் துடைத்துக் குறைகளை ஒழித்து சுத்தான்ம பரிபூரண நிலை அடைவதே நிறைவுறலாவது. மனித வாழ்பான்மைத்து ஒன்று தனி வாழ்வு மற்றொன்று கூட்ட வாழ்வு. ஒன்று உள் வாழ்வு, மற்றொன்று உலக வாழ்வு. உள் மனிதனே மனிதன். அவனையறியாது எவ்வளவு சீருஞ் சிறப்பும், அறிவாற்றலும் அடைந்தாலும் இன்பம் பயக்காது. இன்பத்தின் ஊற்றுதான் இதய பரமாத்மனே! தெய்வ சக்திகள் மனிதனின் ஆதார கமலத்தில் அடைக்கப் பட்டுள்ளன. தூய்மை, வாய்மை, பக்தி, ஞானம், தியானம், தவம் முதலிய சாதனங்களால் அதனை மலர்ப்பித்துப் பூரணமடைய வேண்டும். தன் உள்ளத்தில் உள்ள சுத்தமனைக் கண்டு நிறைவுற்ற பின் உலகமனைத்தையும் அவன் மயமாகவே காணலாம். ஆருயிர்களை எல்லாம் அவனுடைய திருமேனியாகக் காணலாம். அப்பொழுது தான் தானடைந்த இன்பத்தை தன்னவரான மக்களும் அடைய வேண்டும் என்னும் ஆர்வம் உண்டாகும்.

நமது உள்ளமான அரியணை; அவற்றுள் மன்னன் ஒருவன் மன்னிக்கிடக்கிறான். சதா நிலை பெற்றுள்ளான். அவன் நாம் செய்யுஞ் சகல காரியங்களையும், பேச்சுகளையும் உடனிருந்து கவனித்து வருகிறான். அவன் என்ன கூறுகிறான் என்று நெஞ்சைத் தொட்டுப் பார்த்து ஆராய்ச்சியுடன் நடத்தலே மிகவும் மேலானது. மனிதன் நன்னடக்கையோடு நடந்தால் தான் இன்பமடைவான்.

“மனமாசு தீரும் அறுவினையுஞ் சாரா” என்று ஆன்ரோர்களும் கூறியுள்ளார்கள்.

நம்முடைய மன சாக்ஷியே தான் நமக்கு அரசன். அவன் எப்பொழுதும் உண்மையே பேசுவான்; உண்மை வழியையே காட்டுவான். பொய் கூறினல் கொடுப்பான் சவுக்கடி. மனச்சான்றின் வழி நடந்தால் மதக் கோட்பாடுகளே தேவையில்லை. இதோ இந்த வழி நட, கவனம் என்று அடிக்கடி அறிவிக்கிறது. அது தப்பு வழி அந்த தப்பு வழி செல்லாதே! என்று எச்சரிக்கை செய்கிறது. அது தான் மனசாக்ஷி என்பது.

தமிழா! மன சாக்ஷி சொல்வதை மனிதன் அஞ்சாமல் உறுதியுடன் செய்ய வேண்டும். அதனல் வரும் சகல இடர்களும் நன்மைக்கு வித்தாகும். பிறர் மதிக்க, பெயர் புகழ் பட்டம் பெற, மன சாக்ஷிக்கு விரோதமான காரியங்களைச் செய்தால், பொய் சொன்னல், ‘ஏன் தப்பு வழி சென்ருய்?’ ‘ஏன் பொய் சொன்னய்?’ என்று மன சாக்ஷி சூடு கொடுக்கிறது. ஐயோ ஏன் பொய் சொன்னேம் என்று மனம் உள்ளே வேதனைப் படுகிறது. திருடன் திருட்டை யொளித்தால் “அட திருட்டுப் பயலே” என்று மனசாஷி இடித்துரைக்கிறது. நல்லது செய்தால் ‘சபாஷ்’ என்று மனசாக்ஷி தட்டிக் கொடுக்கிறது. இது தான் தரும விளக்கு.

மனசாக்ஷிக்குப் பயந்து பொதுவாக இது தருமம், இது நியாயம், இது தப்பு என்று அறிந்ததை பிறருடைய இகழ்ச்சிக்கும், புகழ்ச்சிக்கும், இருக்கண்களும் பயப்படாமல் கலங்காமல் செய். அப்படிப்பட்ட அறவோரை தருமாத்மாக்களை இறைவன் அருளே மகிழ்வுடன் நன்கு பாதுகாக்கும்.

தமிழா! நன்னேக்கத்தோடு “அரிச்சந்திரன்” சரிதையைப் பார். அவன் பட்ட துன்பங்கள் எல்லாம் பெரு

மைப் படுத்தின. மனித வர்க்கம் சீர்கெட்டு வரும்போதெல்லாம் உலகில் மஹான்கள் சிலர் தோன்றி, தருமத்தை நீதியை எடுத்துக் கூறி அதை நல்வழி படுத்த முயலுகின்றனர். அவர்களுக்கு திருவருளே துணை புரிகிறது. அறியாமக்கள் அத்தகைய தருமவான்களுக்குப் பல இடர் புரிகின்றனர். உதாரணமாக **மகாத்மா காந்தியடிகளை** சுட்டான் ஒருவன், **நபிநாயகத்தை** கல்லாலடித்தனர், **ஏசுவை** சிலுவையிலடித்தனர். இவர்கள் மூவரும் சிரஞ்சீவிகளாயினர். உலகம் கடவுள் என இன்று போற்றுகிறது. இவர்கள் சொன்ன பொன் மொழிகள் மனித வர்க்கத்திற்கு என்றும் வழிகாட்டியாக விளங்கும். இதுதான் அவதார உண்மை. "அறஞ் செய்க" ஆண்டவன் நம்மை காப்பான். தரும நெறி தவரா தருமனை "கண்ணன்" காத்து கருணை புரிய வில்லையா!

தமிழ் நாடு

தமிழா! தமிழ் நாடு ஒரு தனி மாகாணமாக வேண்டும் என்பதும், அதில் தமிழ் மொழிக்கும் தமிழர்களுக்கும் ஆதிக்கம் இருக்க வேண்டும் என்பதும் மிகவும் சரியான உண்மைகள் தான். பாஷா வாரியாக மாகாணங்களைப் பிரிக்கிற போது நம் தமிழ் நாடு ஒரு தனி மாகாணமாகச் செய்யப்படும் என்று தான் எதிர் பார்க்கிறோம். தவிரவும் திருவாங்கூரின் தெற்கிலும், தென் கிழக்கிலும் தமிழர்களே பெருவாரியாக இருக்கிற பகுதிகளையும் தமிழ் மாகாணத்தோடு இணைக்க வேண்டும் என்று செய்து வரும் முயற்சியும் மிகவும் நியாயமானதே. நாம் தமிழ் நாடு என்று கூறும் போது வெறும் இறந்த கால உண்மைகளை மட்டும் எண்ணாது நிகழ் கால நியாயங்களையும், எதிர் கால நோக்கங்களையும் சேர்த்து எண்ண வேண்டும்.

சரித்திர பூர்வமாக தமிழ் நாட்டின் எல்லை வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே குமரி தீர்த்தமுமாகும்.

மற்ற கிழக்கு மேற்கு இருபுறமும் கடலுமாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த பழய கால எல்லையை இப்போதுள்ள மலையாளிகளும் கன்னடக்காரர்களும் ஒத்துக் கொள்வார்கள் என்பது சந்தேகம்; ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள் பெருவாரியாக உள்ள பகுதிகளையெல்லாம் தமிழ் மாகாணத்துடன் சேர்க்க வேண்டும் என்பது தான் சரியான நியாயமாகும். அந்த முறையில் நாம் ஒரு தமிழ் மாகாணத்தை தோற்றுவித்து தமிழர்களின் தனி முறையில் கலைகளையும், கல்வியையும் பெருக்கி கண்யமான வகையில் தமிழ் அரசு நடத்தி, தமிழர்களுடைய பெருமைகளுக்கு காவல் புரிவோம்.

ஆனால் நாம் தமிழ் மாகாணம் கொண்டு, தனி அரசு புரியுங்கால் இந்திய நாட்டை மறந்து விடக் கூடாது. மறந்தால் என்ன நடக்கும்? தமிழ் மாகாணத்தின் தனியரசும் தடுமாறி விடும். இந்திய நாட்டில் எத்தனை பாஷைகள் இருந்தாலும் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்திய மக்கள் அனைவரும் ஒரே தாய்ப்பாலை உண்டு ஒரே நாகரீகம் உடையவர்கள் என்பதை இழந்து விடக் கூடாது. இழந்தால் பல கஷ்ட நஷ்டங்கள் உண்டு. வட கோடியில் வசிக்கும் ஒரு இந்தியன் தெற்கே உள்ள திருப்பதி, ஸ்ரீரங்கம், ராமேஸ்வரம் என்று நினைத்த உடனே வணக்கம் செய்வதும், தென் கோடியிலிருக்கும் ஒரு தமிழன் வடக்கே உள்ள காசி, ஹரித்துவாரம், பிரம்ம கபாலம் என்ற பெயருக்கு கை கூப்பித் தொழுவதும் ஒரு நாள் இரண்டு நாளில் உண்டாகிய உறவுகள் அல்ல. அதை அறுக்க முயல்வதும் அனியாயமுமாகும். மற்ற பாஷைகளைப் பேசும் பல வகுப்பார் வாசஞ் செய்வதை நாம் மறந்து விடக் கூடாது. அவர்களுடைய மொழி தமிழல்லவானாலும் அவர்கள் எல்லா விதத்திலும் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் அநீதி நேர்ந்து விடாத

படி "தமிழ் நாடு தமிழருக்கே" என்றாகி விடக் கூடாது. இல்லை, மேல் சொன்னபடி மற்ற பாஷைகளை பேசும் வகுப்பாரை விட்டு விட்டு, ஆரியர்கள் என்று நம்மில் சிலர் நினைக்கிற தமிழ் நாட்டுப் பார்ப்பனரை மட்டுமே எண்ணப் படுகிறது என்றால், அதைவிட மோசமான செயல் அநீதி வேறு எதுவும் இருக்க முடியாது. இதை தமிழன் உணர வேண்டும்.

நம் தமிழ் நாடு தனி மாகாணமாகி, தமிழ் மக்கள் தனி அரசு பெற்று தமிழ் மொழி ஆட்சி புரியவேண்டுமானால் சேர, சோழ, பாண்டியனும் காட்டிய நல்வழியில் செல்ல வேண்டும். அவர்கள் விட்டுப் போன தர்மங்களை பாதுகாக்க வேண்டும். அவர் போற்றி வைத்த இலக்கியங்களில் பொதிந்து கிடக்கும் நல்லுணர்ச்சிகளை நம்முடையதாக்க வேண்டும். அப்போது தான் சேரன் செய்தது போல வட நாட்டையும் வணங்க வைக்க முடியும். பாண்டியனைப் போல சங்கம் வளர்க்க முடியும். சோழன் கட்டி வைத்த பெரிய கோயில்களைப் போன்ற அறிய வேலையை ஆற்ற முடியும்.

இவ்விதம் கூறுவதால் நான் பார்ப்பனருக்காகப் பரிந்து பேசுவதாக அர்த்தமல்ல. பார்ப்பனர்கள் தங்களை காத்துக் கொள்ள வழியறிந்து கொள்வார்கள். நம்மில் சிலர் இந்த பார்ப்பனர்களை எங்கிருந்தோ கொண்டு வந்து விட்ட **ஆரியர்கள்** என்றும், மற்ற தமிழரை **திராவிடர்கள்** என்றும் திரித்து கூறி பார்ப்பனர்கள் அல்லாத தமிழர்களுக்குள் வளர்ந்து வரும் மனக்கசப்பை மாற்றுவதற்கான முயற்சிகளில் நம்முடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பது தான் கருத்து.

இராமன் ஆரியனா?

தமிழா! **ராமன்** ஆரியனா? தமிழனா? என்ற சர்ச்சை நமக்கேன். அவன் ஆரியனாக இருந்தால் நமக்கு ஆவதென்ன?

ஆனல், ராமன் ஆரியனுக இருக்கலாம், ராவணன் தமிழன் அல்லன். ஏன் எனில் இலங்கையிலிருந்தவர்கள் தமிழர் அல்ல. இலங்கையின் மொழியும் தமிழல்ல. அதை இலங்கையின் சரித்திரமான "மகாவம்சம்" இன்றைக்கும் சொல்கிறது. இப்போது இலங்கையின் அதிபதிகளாக உள்ளவர்கள் சிங்களவர்கள். அவர்கள் என்ன செய்கிறார் கள், ஆங்குள்ள தமிழர்கள் தங்களுக்கு இடையூறு செய்கிற விரோதிகளாக எண்ணி துறத்துகிறார்கள். நாம் அதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். தமிழனுக்கும், இலங்கைக்காரனுக்குமுள்ள உறவு அறுபட்டு வருகிறது. இது இங்ஙனமிருக்க கண்ணுக்கும், மனதிற்கும் எட்டாத இராமாயண கால சரித்திர உண்மைகளை ஊகிக்க முடியுமா ?

ஆகவே ராமாயணம் என்பது ஆரியனுக்கும் தமிழனுக்கும் நடந்த சண்டை என்றும், ராமன் ஆரியன், ராவணன் தமிழன் என்று கற்பனை செய்து ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொள்ளலாகாது. தமிழா பொது நலம் புரிவாய்.

பொறுமை

தமிழா! ஒரு மனிதனுக்கு எவ்வளவு பொறுமை இருக்கிறதோ அவ்வளவே ஒரு காரியத்தையும் சாதிக்க முடியும். ஆற்றலும் உண்டாகும். உறுதியான பொறுமையால் உயர்ந்த மேன்மையடைவான் மனிதன். பொறுமை ஏற்பட்டவுடன் அன்பு உதயமாகிவிடும். அன்பிற்கு ஆர்வம் உள்ளம்; ஒற்றுமை உயிர்ப்பு, உண்மை கரணம், கண்ணோட்டம் விழிகள், தியாகம் உடலம், பொறுமையே நரம்பு. ஆன்ம நேயம் என்னும் ஊற்றினின்று பொசியும் அருவியே அன்பு. அன்பினுடைய வெற்றி பொறுமையால் தான் எய்தும். படபடப்பு இல்லாமை, இடம் பொருள் அறிதல், காலமுணர்தல், கருத்தில் உறுதி, உண்

மைக்கு வெற்றி உண்டு என நம்புதல், அறிவாளிகளுடைய சொற்களுக்குப் படிதல், அகந்தை யின்மை, பொறுமை, வஞ்சம், பொய், சூது, போட்டி, கோபம் இல்லாமை, வஞ்ச விரோதியின் வலையில் சிக்காமை, வெற்றி தோல்வி வந்திடினும் விடா முயற்சி, துன்பங்களை வெற்றிப் படிகளாகக் கொள்ளுதல் பகைவரை பகைக்காது பழுதை திருத்தல், ஆன்ம நிச்சயம், அஞ்சா நெஞ்சம் கொல்ல வரினும் கோண முகம், எல்லாருக்கும் இனிதே நினைத்தல் இவையே பொறுமை பூஷணங்களாகும். பொறுமையே வெற்றிப் பொன்முடி சூடும்.

பொறுமையால் தருமன் பொன் முடிப் பெற்றான். பொறாமையால் துரியன் பொல்லா நரகம் எய்தினான். "ஆசை வடிவாகத் தீங்கு செய்யும் பகைவனை வெல் என்றான்" **கண்ணன் கீதையில். கண்ணனைப் பகைத்தது கம்ஸன்** அல்ல; கம்சனுட் புகுந்த அச்சந்தான். இராவணன் இராம விரோதியல்ல; அவனுட் புகுந்த பெண் வெறியே. மனசாட்சியை மீறியதே தீமைக்குக் காரணம். ஆசை ஆணவங்களே மனிதனை அரக்கனாக்குகின்றன. பகைவன் இடர் செய்தாலும் நாமும் இடர் செய்யாது ஐயோ இப்பகையால் இவன் வாழ்க்கை கெடுகிறதே என்று இரங்கி பழுதறுத்து நலம் புரிய வேண்டும். முடிவில் நியாயமுணர்ந்து எதிரி இணங்குவான். பொறுமை பகையை மாற்றும் மருந்து. மனிதன் பகையல்ல மனப் பேயே பகை. **பிரகலாதன், காந்தியடிகள்** இருவரும் பொறுமையால் அசுரத்தன்மையை வென்றனர், நான் என்ற ஆணவம் தான் போருக்குத் தொடங்குகின்றது: அதையொழி தமிழா! நலமெய்துவாய் உண்மை நம்பு. நம்பகம் நலன் பயக்கும். நம்பாமை நரகம் தரும்.

"பொறாமை கடலினும் பெரிது"

"கூரம்பாயினும் வீரியம் பேசேல்"

புராண இதிகாசங்கள் ஏன் ?

புராண இதிகாசங்கள் நமது வாழ்க்கைக்கு வழி காட்டும் சாதனங்களாக ஏற்பட்டவைகள். அவைகளில் சில விடங்களில் தவறுகள் இருக்கத்தான் இருக்கின்றன. சொற்ப தவறுகளை வைத்துக் கொண்டு அவை யனைத்தும் பொய் என்று தள்ளி விடுதல் கூடாத செயல்களாகும். புராணங்களில் எவ்வளவோ நற் பொருள்கள் மலிந்துக் கிடக்கின்றன. மனிதன் உலகில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதை நன்றாக சித்தரித்திருக்கிறார்கள். குரோத மானப்பான்யோடு பார்க்கிறவர்களுக்கு அது குற்ற மாகவே தான் தோன்றும். இதிகாசங்கள் எவ்வளவோ நன் நீதிகளைப் போதிக்கின்றது. ஆனால் நாம் அதை சரிவர உணர்ந்துக் கொள்ளாது கதைகளாக பாவித்து குறை கூறி வருகிறோம்.

இராமாயணத்தில் நாம் காணுவதெல்லாம் என்ன ? என்பதை உணராமல் சூர்பனகை உத்தமி, சீதை விபசாரி; ராவணன் தமிழன், ராமன் ஆரியன் என்ற கற்பனை எல்லாம் செய்து மக்கள் மனதை தவறான பாதையில் செல்ல தூண்டுவது முற்றும் பிற்போக்கான செய்கையாகும். ஆரியன் செய்ததாகட்டும், அல்லது தமிழன் செய்ததாகட்டும், மஹமதியர் செய்ததாகட்டும், இல்லை ஆங்கிலேயர் செய்ததாகட்டும் யார் செய்த நூலானாலும் அதில் இருக்கும் உண்மையும், நியாயமுமே தான் நமக்கு வேண்டியது. அறிவாளிகள் சகல மதத்தினரும் செய்த நூல்களை ஆராச்சி செய்துக் கொண்டு தான் வந்திருக்கிறார்கள். இன்றும் செய்துக் கொண்டு தான் வருகிறார்கள். **ராமகிருஷ்ணபரமம்ஸா**, சுவாமி **விவேகானந்தர், மகாத்மா காந்தி** முதலானோர்கள் சகல மதஸ்த்தர்களுடைய நூல்களை எல்லாம் ஆராய்ச்சி செய்து வந்தார்கள். அவைகளில் உள்ள நல்ல நீதிகளையும் மேற் கொண்டார்கள்.

இராமாயணம் கூறுவது எல்லாம் நீதியைத்தான். பிள்ளை தகப்பனிடம் எவ்வாறு நடக்கவேண்டும், தாயிடம் எவ்வாறு நடந்துக் கொள்ளவேண்டும், சகோதரியிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்; தாய் மகனிடம் எப்படி நடப்பது, தந்தை எவ்விதம் நடந்துக் கொள்ள வேண்டும், மனிதன் நண்பனிடம் எப்படி நடந்துக் கொள் வது, விரோதியிடம் எவ்வாறு நடந்துக் கொள்வது என்ற நீதிகளையே போதிக்கிறது. இது தான் சட்டமுமாகும். இத னலேயே பாரத இராமாயணம் இரண்டையும் இதிகாசம் என்று கூறப்பட்டது. ராமன் தந்தை தாய் வார்த்தையை காப்பாற்றுவதற்காக காடு செல்கிருன்; அண்ணன் மீது மாருத அன்புக் கொண்ட பரதன் காடு சென்ற ராமனை நாட்டுக்கு வர அழைக்கிருன் சொல்லொணு துக்கத்தோடு. அது கண்டு ராமன் பதினன்கு வருடமும் பதினன்கு நாட் களாக கழித்து வருவேன் என்கிருன். இதை பகுத்தறி வாளர்கள் நாட்டின் மீதுள்ள பற்ருல் ராமன் அம்மாதிரி கூறினன் என்று சொல்லுகிருர்கள். நமது வீட்டில், நம் மீது அளவு கடந்த அன்பு வைத்துள்ள தாயோ, அன்று சேயோ என்று வைத்துக் கொள்ளுங்கள்; நாம் தூர தேசம் சேவகார்த்தம் போகவேண்டி வருங்காலத்தில் நம்மை செல்லவிட மனம் ஒவ்வாது கண் கலங்குகிறது. அப்போது என்ன அதற்கு ஆருதல் கூறுவோம். அப் பனே வருந்தாதே; நான் கூடிய சீக்கிரம் வந்து விடுவேன். மூன்று வருடத்தையும் மூன்று மாதமாக எண்ணு;என்று அதற்கு அன்பு மொழி கூறுகிருேமே அது தவரு? இல்லை நமக்குள்ள வீட்டுப்பற்ரு? தமிழா சிந்தனை செய்துப்பார்.

இராவணன் சீதையை அபகரித்தேகி விடுகிருன். ராமன் கடவுளாச்சுதே ஏன் அவனை அப்போதே கொன்றி ருக்கக் கூடாது என்று கூறுகிருர்கள். வாஸ்தவம். ராமன் அந்தர்யாமியான கடவுளாக இருக்கலாம்; ஆனல் ராமன் அரச குமாரனகத் தானே பிறந்திருக்கிருன். அதற்குகந்த

வாறு தானே அவன் நடக்க வேண்டும். நீதி, சட்டம், ஒழுங்கு இவைகளை அனுசரித்தான் ராமன். உதாரண மாக நாம் ஒருவனுடைய மனைவியை அபகரித்தால் அவ ளுக்குடையவன் நேரில் வந்து நம்மை கத்தி கொண்டு வெட்டி வீழ்த்துவது நீதியா? அங்ஙனம் செய்தால் அர சாங்கம் அவனை சும்மா விடுமா? மனிதன் செய்யத்தகாத பெரிய தவறை செய்தாலுங் கூட நியாயம் தீர்ந்த பின்னர் தானே தண்டனை தர வேண்டும். கோர்ட்டுகள் ஏன்? அதற்கென நீதிபதிகள் ஏன்? ஒவ்வொருவரும் தண்டனை செய்யும் நீதிபதிகளாக மாறிவிட வேண்டும் என்பதா? **தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரனு?** சீதையை ராவண கொண்டேகினன். புலன் கண்டான் ராமன். தூதனுப் பினன், தவணை தந்தான், நீதி கூறினன் உலகோர் தவறை உணரச் செய்தான், ராவணன் திருந்துவதாய் இல்லை. தொடங்கினன் போரை, ஆயுதமற்று நிரபராதியான அரக் கனுக்கு அறங் கூறினன் தருமப்படி போரை நிறுத்தி. ஏற்காவிடில் நாளை ஆயுதத்தோடு தேரோடு போருக்கு வாவெனக் கூறினன் இது தர்மமா? அதர்மமா? தமிழா! சிந்தனை செய்.

பொறுமைக்கொண்ட துரியன் பங்காளிகள் நாட்டை சூதாடி பறித்துக் கொண்டதன்றி, துரௌபதியை சபை யில் நிறுத்தி பாமர மனிதனும் செய்யத்தகாத செயலான சேலையை உரியச் செய்தானே; பாண்டவர் பதைத்து காரி யஞ் செய்தனரா? பொறுத்தார்களே ஏன்? நீதி இருக் கிறது, சத்தியம் உள்ளது, சட்டம் தண்டிக்கும் காலம் வரட்டும் என்றுத் தான் பொறுத்தார்கள்.

தமிழா சிந்தனை செய்துப் பார். சாம, பேத, தண்டம் என்பதை அனுசரிக்க வேண்டுமல்லவா? பிற்காலத்தில் மனிதர்கள் கொடுஞ் செயலுக்காளாகி விடப் போகிறார் கள் என்றஞ்சியே அவர்கள் நமக்கு நடந்து காட்டி இருக்

கிறார்கள். அதைத் தான் இன்றும் நாம் சட்டம் என்று கூறுகிறோம். சட்டத்திற்கு அடங்கி நடக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறுகிறதே, அதை எண்ணிப் பார் தமிழா!

சீர்திருத்தம்

நமக்கு அவசியம் சீர்திருத்தம் வேண்டியதே. நம் மக்கள் மூட பழக்க வழக்கங்களில் மூழ்கிப் போய் இருக்கிறார்கள். அவர்களை அவசியம் திருத்தி நல்லறிவு ஊட்ட வேண்டியது அறிஞர் கடமை. ஆனால் திருத்த முயலுவது எப்படி என்பதில் தான் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் தமிழன். பண்ணடுட்களாக மூட பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடக்கும் மாந்தர்களை அன்பு வழியில் பிரசாரஞ் செய்து திருத்த வேண்டும். அது நாட் செல்லச் செல்லத் தான் அறிவு பெறுவார்கள். திடீரென்று கைகூடி விடுங் காரியமன்று பிரசாரம் செய்பவர்களுக்கு நிறைய சகிப்புத் தன்மை வேண்டும். மக்களை தூஷித்தோ, அல்லது கட்டாயப் படுத்தியோ, காரிய சாதகம் செய்துக் கொள்ள முடியாது. சின்னங்களை பலாத்காரமாக துடைப்பதிலும், பூணூலை அறுப்பதிலும், சுவற்றில் தூர்பாஷைகள் வரைவதிலும் மக்கள் மனம் மாறி விடாது. சீர்திருத்தவாதிகள் என்போர் இதை அவசியம் திருத்திக் கொள்ள வேண்டும். திருத்திக் கொள்ள வேணடுமெனில் அவர்கள் செய்வதாக நான் கூறவில்லை. அவர்களின் அடிஙயை பின்பற்றுபவர்கள் செய்வதைத் திருத்த வேண்டும். அன்பு வழி ஆகாதது ஒன்றுமே யில்லை.

மகாத்மா காந்தியடிகள் போதனையைக் கேட்டு, வந்த இடரை ஏற்று, சிறை கூடம் நண்ணி, செயல் புரிந்ததால் தான், இன்று நமது நாடு நம் கைக்கு வந்தது. அதை அனுசரித்த நாம், இன்று சீர்திருத்தத்திற்காக செயலாற்றும் விதம் முற்றும் மாறாக உள்ளது. மேடையில் வகுப்புத்து

வேஷ வசைமாரி, புராணத்தாக்குதல், கற்பேது, பாவ மேது, புண்யமேது எல்லாஞ் சுத்தப் புரட்டு என்று பிர மாதமான ஓலம், பல தரப்பட்ட மக்களை ஒன்று திரட்ட பக்குவமான வழி வொன்று கண்டு, யாவருக்கும் ஏற்றவ கையில் பிரசாரஞ் செய்ய வேண்டும். அதுதான் சீர்திருத்த வாதியின் நேர்மை. அவாகள் கட்சியும் பலனடையும். தமி ழன் சீரிய எண்ணத்துடன் சிந்தனை செய்து பார்த்தால் உண்மை உணர்வான். தமிழா விழித்தெழு!

தெய்வத்தின் பெயரால் கொலையா?

இன்று நம் நாட்டு மக்கள் மதத்தின் பெயரால், தெய்வத் தின் பெயரால் கொலைத் தொழில் புரிகிருர்கள். இது அறவே வொழிய வேண்டும். ஒழிந்தால்தான் நாம் நாகரீக மனிதர்கள் என்பது பொருந்தும். நாம் செய்யும் இக் கொடுஞ் செயல்களைக் கண்டு அன்னிய மதத்தினர் எள்ளி நகைக்கின்றனர். நாகரீகம் உடையவர்கள், பகுத்தறிவு படைத்தவர்கள், சகல சாஸ்திர ஆராய்ச்சி யுடைவர்கள் என்று கூறிக்கொள்ளும் நாம் செய்யும் கொடுஞ் செயலைக் கண்டு எவர் தான் சிரிக்க மாட்டார்கள். சிரிக்க உடல் எடுத்தவஞ தமிழன்?

உயிர்க் கொலைக் கூடாது. ஜீவனை சிவமயமாக்க வேண் டும். அஹிம்சா விரதமே அரிய பெரிய தருமமாகும். உயிர்க் கொலை செய்பவன் பாபங்களால் தற்கொலையே செய்துக் கொள்கிருன்; மனசாக்ஷி அவனை வாள் போன்று அறுக் கும், மன்னுயிரை தன்னுயிர் போலக் கருத வேண்டும். ஒரு தனி உயிரை கடவுளின் பெயரால் கொலை புரிவது பெரிய குற்றமாகும். எல்லா ஜீவன்களையும் படைத்த ஈஸன் ஜீவனைத் தாஞ பலி கேட்கிருன். மக்களை யீன்ற தாய் மக் களை மாய்க்க எண்ணுவாளா?

சிறு தெய்வங்களின் பெயரால் ஆடு, கோழி, எருமை களைப் பலியிடுவதும் மோகப் படுகொலையே, தன்னுயிர்

விரும்புவோர் பிறவுயிர்களை போற்றுக! இரத்தக் கரைகள் இன்றே யொழிக.

மனிதன் மரணம் என்றவுடன் பதைக்கிருன். தானே பிறவுயிர்களுக்கு எமனுகிருன்; தன்மேற் கத்திப் பட்டால் 'ஐயோ' என்கிருன்; தீங்கற்ற உயிர்களை வாளால் அறுத்துத் தள்ளுகிருன். வாயில்லா ஜீவன்களுக் கிழைக்கும் இக் கொடுமையே போராகக் கிளம்பி மனிதரை பழி வாங்குகிறது. தமிழா! பழி பாவத்திற்கு அஞ்சு. எல்லா வுயிர்க்கும் இதமே செய்! இதஞ் செய்யாவிடினும் அதஞ் செய்யாதே! பொல்லது போக்கு; நல்லது செய்!

கற்பு

அப்பனே நமது நாட்டு நாரி மணிகள் கற்புடைய மாதர்களாக திகழ்ந்தார்கள். ஏன்? கற்பு என்ற அஸ்திவாரத்தின் மீதே நிலை நின்றதுதான் நமது நாடும். ஆதியில் பெண்களுக்கு உன்னத ஸ்தானம் தந்து போற்றினுர்கள். அதற்கு கந்தவாறு அக் காலத்து பெண் மணிகளும் எல்லா வகையிலும் சிறந்து விளங்கினுர்கள். பிறர் கண்டு மயங்கும்படி தனது அழகைப் பகட்டி மினுக்க மாட்டாள் கற்புள்ள மங்கை. அவள் தானே கணவனுக்கு விலையில்லாத ஆபரணமுமாவாள். அத்தகைய உத்தமி வீட்டிற்கு வந்து வாய்த்த இலக்குமியாவாள். 'அணி' என்ருல் அழகு, பெருமை, அலங்காரம், ஆபரணம், நன்மை எனப் பொருளாம்; பொன் என்ருல் அழகு, இலக்குமி, பொலிவு, பிரகாசம் எனப் பொருளாம்.

பொன்னும் மணியும் பொருந்தியது போல, காதலும், கற்பும் பொருந்திய சதிபதிகள் ஒருவருக் கொருவர் உயிரணியாவர். ஒருவனுக்கு பொன்னை விட பெரிய செல்வம் நன்மனைவியே. மாசற்ற பொன்னுக்கு மஞ்சள் பூசு வேண்டுமோ? வேண்டாம். அது போலக் கற்பழகிற்குக் கன

வழகு தேவையில்லை. மணாளனின்பமே மாதருக்கு அணி கலன். உடலை மறைக்கப் போதிய நல்லாடை, திருமங்கல நாண், முகத்தில் மஞ்சள் குங்குமம், மாசற்ற புன்னகை, நாவில் இனிமை, மனதில் பொறுமை—இவை தான் குலம களிற்கு இனிய நல்லணிகளாகும்,

மாதருக்கு ஆடை, அழகு தராது. சேவைதான் அழகு தரும். இயலழகு; பொன்னும் வைரமும். முகச்சாயம் (பௌடர்) போட்டு மினுக்குதல் போலியழகே யாகும். கற்பும், மங்கல மலர் நகையும், நாணமும், இனிமையும், மேன்மையும் இல்லறத் திருவிற்கு அழகாம். பெண்கள் காதிலும், மூக்கிலும் கழுத்திலும் மார்பிலும் காலிலும் நாட்டுச் செல்வம் உறங்குகிறது. ஆயிரம் கணக்கான ஏழைகள் உழைப்பும் பிழைப்பும் பெற்று வாழக் கூடிய முதல், அணி மணிகளாக மினுக்குகின்றன.

நாரி மணிகள் நாகரீகத்திலும், ஆடம்பரத்திலும் மிகுத்து பொன்னணிகள் அணிவதால் நாட்டில் எத்தனை திருட்டு, மோசம், கொலை, கொள்ளை, கள்ள விற்பனை, விப சாரம், கவலைச் சுமை, பொருள் நாட்டம், வறுமை, சோம்பல், செருக்கு முதலிய தீமைகள் உண்டாகின்றன? மாதர் உடலில் மினுக்கு நகைகளெல்லாம் இன்றே எடுத் துத் தொழிலிற் போட்டால், நாட்டில் வறுமையகலும், கல்வியும் தொழில் வளமும் பெருகும்.

பெண்களுக்குத் தற்போதுள்ள கல்வி முறையே சரி யற்றது. கற்பை காப்பாற்றிக் கொள்ள வகையற்றது. நாரி மணிகளுக்கு வேண்டுவது நற்கல்வியே; அதை மாற்றி யமைக்கவேண்டுவது மிக மிக அவசியம். மகாத்மா காந்தி யடிகள்கூட இதை பன் முறை கூறியிருக்கிறார். அரசாங்க மும் கவனிக்கும் என்றெண்ணுகிறோம்.

எனது முடிவுரை

தமிழா! இன்று நம் நாட்டில் தோன்றியுள்ள எதிர்ப்பு கோஷ்டிகளின் தலைவர்கள் உண்மையில் மிக நல்லவர்களே; அதைப் பற்றி அணுவளவும் குறை கூற முடியாது; ஆனால், இப்படிப் பட்ட நல்லவர்கள் ஏன் மாறு பட்ட அபிப்பிராய முடையவர்களாகத் தோன்றினார்கள்? என்பதை நீ சிந்திக்கையில் தான் உண்மை விளங்கும். நேற்று வரை தேவாரம் வாயாரப் பாடினவர்கள், நாலாயிரம் நாத்தழும்ப ஓதினவர்கள், குறள் பாடி குண மிகக் கொண்டவர்கள் இத்தியாதி பேர் வழிகள் தேடிய பதவி கிட்டாததால் வெறுப்படைந்து ஆக்க வேலைக்கு முட்டுக் கட்டை போடுகிறார்கள். கேவலம் பட்டம், பதவிக்கு போட்டி போடும் இவர்களா நம்மை கை தூக்கி விடப் போகிறார்கள்? அப்பனே! நம்மெதிரில் சொற் பொழிவாற்றும் உத்தமர்களின் பூர்வ சரித்திரத்தைப் பார்; உண்மை அறிவாய். தூங்காதே!

ஜெய் ஹிந்த்

சுவாமி விவேகானந்தர் வீரவுரை

தமிழா! இப்போதுள்ள அறிஞர்கள் எல்லாம் என்னென்னவோ பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால் அவர்களெல்லாம் வீரர் விவேகானந்தரை மிஞ்சின அறிவாளிகளல்லர், எழுத்தாளருமல்லர். ஏதோ எல்லாம் அறிந்தவர்கள் போல பாவனம் செய்து பெரியவர்களாகிவிட எண்ணி பிரசாரம் செய்கிறார்கள். நமது மதத்தைப் பற்றி அயல் நாட்டில் (சிகாகோவில்) 1893-ம் ஆண்டு செப்டம்பர் 11-ந் தேதி சர்வமத சங்கத்தில் தைரியத்துடனும், வீரத்துடனும், விவேகத்துடனும் பொழிந்த பேச்சு மழையைப் பார். மற்றையோர் சொல்லில் மலைக்காதே.

சுமார் 20000 பேர் கொண்ட மிகப் பெரிய மண்டபம்! புத்த மதம், ஜைனமதம், கிருஸ்து மதம், இஸ்லாம் மதம், பார்சி, தவோ, கொரன்பூசி, ஷிண்டோ, பிரமம் சமாஜம், தியாசபி முதலான மதங்களின் பிரதிநிதிகள் உட்கார்ந்திருக்கின்றனர். டாக்டர் பரோஸ், ஸ்நெல், கார்டினல், ஜிம்பின்ஸ், பிஷப் அர்நெட், ப்ரதாப் சந்தி முசும்தார், காந்தி, சக்ரவர்த்தி, அனிபெஸன்ட் முதலியோருடன், நாகர்கார்

(பிரம்ம சமாஜி) தருமபாலர் (புத்த மதஸ்தர்) இருவருக்கு மிடையே சுவாமிஜி கம்பீரமாக வீற்றிருந்தார். சக்ரவர்த்தி பிரம்ம ஞான சபைக்காக பேசி முடிந்தது. பாரோஸ் வீரர் விவேகானந்தரை பேசச் சொல்ல சுவாமிஜி பேசியதாவது.

குருவே சரணம், கோவே சரணம், திருவே சரணம், தேவே சரணம்! என்று பிரார்த்தனை செய்து விட்டு, மனதுள் இஷ்ட தெய்வத்தை நினைத்து வணங்கி அடியில் கண்டபடி பேசத் தொடங்கினர்.

"அமெரிக்க சகோதரிகளே, சகோதரர்களே! என்றதும் கரகோஷம் வானைப் பிளந்தது. கரகோஷம் நின்றதும் உங்களன்பான நல் வரவேற்பை ஏற்க எழுந்திருக்கையில், உரை கடந்த இன்பத்தால் என் உள்ளம் பூரிக்கிறது. உலகில் மிகப் பழமையான துறவோர் குழுவின் சார்பாக உங்களுக்கு என் வந்தனம்! எல்லா வகுப்பு வகைகளையும் சேர்ந்த கோடானு கோடி ஹிந்துக்களின் சார்பாக என் வந்தனம்!

கிழக்கு நாடுகளின்று வந்துள்ள பிரதிநிதிகளை குறித்து, "தூர தேசங்களினின்று விஜயஞ் செய்துள்ள இவர்கள் சமரஸக் கொள்கைகளைப் பல நாடுகளிலும் பரப்ப ஏற்றவர்கள் என்று இம் மேடை மீது பேசியவர்களுக்கு என் வந்தனம்! பிறமத வெறுப்பின்றி '**சர்வமத சமரசத்தை உலகிற் கெல்லாம் போதித்த சமயம் எனது**' என்று பெருமையுடன் கூறுகிறேன். அகில சமரசம் மட்டுமின்று; எல்லா மதங்களும் உண்மை என்பதையும் நாங்கள் நம்புகிறோம். 'விலக்கு, ஒழுக்கம்' என்னும் பேச்சேயில்லாத ஆரிய மொழியைக் கொண்ட சமயம் **எனது** என்று பெருமையாகச் சொல்கிறேன். எல்லா மதங்களிலும், நாடுகளிலும் மதக் கொடுமையால் வருந்தியோருக்கு அபய மளித்து ஆதரவு தந்த சமுதாயம். எனது என்பதிற் பெருமை கொள்ளுகிறேன். உரோமக் கொடுங்கோல் தமது

கோயிலை யிடித்துப் பாழாக்கிய ஆண்டிலேயே, தென்னிந் தியாவிற்கு வந்து எங்களை யடைந்த சுத்தமான யூதர்கள் இன்னும் எங்களன்பில் ஓங்குகின்றனர் என்பதைப் பெருமையுடன் எடுத்துரைக்கிறேன். முன்னும், இன்றும் ஜோராஸ்திரியருக்கு இடமளித்து ஆதரித்த மதம் எனது என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன். சகோதரர்களே, சிறு வயது முதல் நான் அடிக்கடி சொல்லி வந்ததும், கோடிக் கணக்கான மக்கள் பாராயணம் செய்வதுமான தியான ஸ்லோ கத்தினின்று சில வரிகளை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன் "பல் வேறு முகங்களில் உற்பத்தியாகும் வெவ்வேறு நதிகள், முடிவில் ஒரே கடலிற் கலக்கின்றன; அது போல அவரவர்க்கு உகந்தவாறு கொள்ளும் பல சமய நெறிகள் வளைந்தும், நேராக நீண்டும் வெவ்வேருகத் தோன்றினும், இறைவனே எல்லாம் நின்னையே அடைகின்றன!"

"எம்மதமும் சம்மதம்"

இதுகாறும் நிகழ் பருஞ் சிறப்பு வாய்ந்த இந்த சர்வ மதக் கூட்டமே, **கீதையின்** அற்புதமான கொள்கையை உலகிற்கு நன்கு விளக்குகின்றன: "எவர் எவ்வழியே என்னையடையினும் யான் அவர்களை ஏற்கிறேன். மனிதர் அனைவரும் முடிவில் என்னையே அடையும் பல நெறிகளில் உழல்கின்றனர்." நீண்ட காலமாக இத்திரு உலகை, வகுப்பு வாதமும், பிடிவாதமும் அவற்றினின்றிழிந்த பயங்கரமான மதவெறியும் பிடித்து வருகின்றன. அவை உலகில் பலாத்காரமாக மனித ஜாதியை குருதி வெள்ளத்தில் தோய்த்தன; நாகரீகங்களை அழித்து, சமுதாயங்களையெல்லாம் மனங் கலக்கின. இந்தப் பயங்கரப் பேய்களில் லாவிடின், மனித சமூகம் இப்போதிருப்பதைவிட எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருக்கும். ஆனல் அவை

ஒழியக் காலம் வந்துவிட்டது! இந்தக் கூட்டத்தை மதித்து இன்று காலையடித்த மணியே, எழுத்தாலும், வாளாலும் புரியும் மதவெறிக் கொடுமைக்கும், ஐக்கியத்தை நோக்கிச் செல்லும் மனித ஜாதியினிடையே புகுந்த தீய மனஸ்தாபங்களுக்கும் சாவுமணியாகும் என்பதை உறுதியாக நான் நம்புகிறேன்.

உலகில் வேற்றுமைகளின் காரணமென்ன வென்பதற்கு ஒரு சிறு கதை சொல்லுகிறேன். கிணற்றிலே ஒரு தவளை பிறந்து வளர்ந்து வசித்தது; அது கிணற்றிலிருக்கும் பூச்சி புழுக்களையெல்லாம் உண்டு என்னைப்போலத் தடித்துக் கொழுத்துப் போயிற்று (சிறிப்பு)! ஒரு நாள் ஒரு கடல் தவளை வந்து, அந்தக் கிணற்றில் விழுந்தது. இரண்டும் சம்பாஷிக்கின்றன.

கிணற்றுத் தவளை : நீ எங்கிருந்து வருகின்றாய்?

கடல் தவளை : நான் கடலினின்றும் வந்தேன்.

கிணற்றுத் தவளை : கடல் எவ்வளவு பெரிது? என் கிணற்றளவு இருக்குமா? (என்று கிணற்றின் ஒரு பக்கத்திற்குத் தாவியது.)

கடல் தவளை : நண்பனே, உனது சிறு கிணற்றுடன் கடலை எப்படி ஒப்பிட முடியும்?

கிணற்றுத் தவளை : (இன்னும் எட்டத்தாவி) உனது கடல் இவ்வளவு பெரியதாய் இருக்குமா?

கடல் தவளை : இதென்ன பிதற்றல்? கிணறு கடலுக் கிணையா?

கிணற்றுத் தவளை : எப்படி இருப்பினும், என் கிணற்றினும் பெரிது இவ்வுலகில் எதுவும் இருக்க முடியாது; இந்தப் பயல் பொய் சொல்லுகிறான்? இவனை விரட்டியடி! (கரகோஷம்.)

இதுதான் பெரிய சங்கடம். நான் ஹிந்து; என்னிடத்திலேயே நான் இருந்துக்கொண்டு அதுவே, கிணறே, உலகெல்லாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். கிருஸ்த்துவனும் அவ்வாறே உலகெல்லாம் அவன் கிணற்றளவு என்கிறான். இஸ்லாமியன், அவனிடத்திலிருந்து இது தான் உலகெல்லாம் என்கிறான். நமது சிற்றுலகில் இந்த இடர்க்கட்டைகளை உடைக்கப் பெருமுயற்சி கொண்ட அமெரிக்கர்களான உங்களுக்கு **நன்றி** செலுத்தக் கடவேன். சீக்கிரம் உங்களின் சீரிய வினை வெற்றி பெற ஆண்டவன் அருளுவானென்று நம்புகிறேன். (கரகோஷம்.)

கிருஸ்தவர்களே, நீங்கள் புறச்சமயத்தாரின் ஆன்மாவைக்காக்க மதப்பிரசாரர்களை (Missionaries) யனுப்புகிறீர்கள்; அவர்கள் உடலைப் பட்டினியினின்று காக்க ஏன் முயலக்கூடாது? நீங்கள் இந்தியாவெங்கும் சர்ச்சுகள் எழுப்புகிறீர்கள்; ஆனல், கிழக்கு நாட்டாரின் பெருந்தேவை, மதமன்று; அவர்களுக்குப் போதிய மதவுணர்வு உண்டு. பசியில் தவிக்குங் கோடானுகோடி இந்தியர்கள் தொண்டை வற்ற கூவுவது ஒரு ஜாண் வயிற்றின் உணவிற்காகவே. பட்டினியால் தவிக்கும் மக்களுக்குத் தத்துவபோதனை செய்வதும், மதம் புகட்டுவதும் அவர்களை ஏளனஞ் செய்வதேயாகும். அது நேர்மையுமாகாது. ஞானமார்க்கம் போதிப்பவர்கள் மக்களின் பசிநோயை யகற்றினல் அதுவே போதுமானது. இந்தியர்கள் ஆதிகாலந்தொட்டே சத்துவஞானம் பெற்றவர்கள். உலகுக்கெங்கும் எடுத்துரைக்கவும் வல்லவர்கள்.

பசியில் பாமார்திகமா?

நான் பௌத்த சமயியல்லன்; எனினும், பௌத்தனே! சீனமும், ஜப்பானும், இலங்கையும் புத்த பகவானின் உபதேசங்களைப் பின் பற்றுகின்றன; இந்தியாவே

புத்தரை அவதாரமாக வணங்குகின்றது. கிருஸ்து, யூதர்; சாக்கிய முனி, ஹிந்து. யூதர் கிருஸ்துவை மறுத்துச் சிலுவை யிட்டனர்; ஹிந்துக்கள் சாக்கிய முனியை கடவுளாக வணங்குகின்றனர். ஹிந்து தருமம் "**கர்மம், ஞானம்**" என்று இரு பிரிவினது. ஞானபாகம் முதன்மையாகத் துறவிகளால் ஓதப்படுகிறது; அதில் ஜாதி வேறுபாடு கிடையாது. உயர்வு தாழ்வின்றி இந்தியாவில் எந்த ஜாதியானும் துறவியாகி சமத்துவம் பெறலாம். ஜாதி இல்லை. ஜாதி, சமுதாயக் கட்டுப்பாடு. சாக்கிய முனி, துறவி; வேதங்களில் மறைந்திருந்த உண்மைகளை உலகத்தனைவருக்கும் பயன்பட பரப்பியது அவருடைய பரந்த உள்ளமே! முதன் முதலில் மதபோதனையைப் பழக்கத்திற்கு கொண்டு வந்தது அவரே யாவர். மதமாற்றத்தையும் முதலில் கையாண்டவரவரே. அனைவரிடமும், முதன்மையாக அறியாமையிலும் வறுமையிலும் வருந்துவோரிடம் இருந்த அற்புதமான கருணையே, அவருடைய பெரும் பெருமை. அந்தணச் சீடர்கள் அவருடைய உபதேசங்களை ஆரியத்தில் மொழி பெயர்க்க விரும்பியபோது "நான் ஏழைகளுக்காகவே, இருக்கிறேன். பொது ஜனங்களின் பாஷையிலேயே பேசுகிறேன்" என்றார். புத்த மதத்தின் பரந்த உள்ளமும், வேத மதத்தின் அறிவு விரிவுமின்றி ஹிந்து மதம் பிழைக்காது. புத்த மதமும், தேவ மதமும் பிரிக்க முடியாதவை. அப்படிப் பிரிந்ததினால் தான் இன்று இந்தியா 33 கோடி ஏழையர் நாடாகி, சென்ற ஆயிரம் ஆண்டுகளாகப் பிறருக்கு அடிமையாகி இருக்கிறது. வேத மதத்தின் ஆத்ம ஞானத்தையும், புத்தரின் அற்புதமான ஜீவகாருண்ய சக்தியையும் நாம் ஒன்று சேர்க்க வேண்டும்.

ஹிந்து மதம், ஜாரதுஷ்ட்ர மதம், யூத மதம்—இம் மூன்றும் சரித்திர காலத்திற்கு முற்பட்ட சமயங்கள். யூத மதத்தைத் துரத்தி, கிருஸ்தவ மதம் மேலோங்கியது;

பார்சிகள் சிலரே ஜாரதுஷ்டர மதத்தின் பெயரால் இருக்கின்றனர். ஆனால் ஹிந்துக்களின் வேத மதமோ, தன்னை எதிர்த்து வந்த சமயங்களை நாளடைவில் தன்னுள் ஜீரணித்தோங்குகிறது. மிகவுயர்ந்த அத்யாத்ம வேதாந்த ஞானம் முதல் பலவகைத் தான விக்ரக ஆராதனை, சூன்ய வாதம், நாஸ்தீகம் வரையில் அனைத்திற்கும் ஹிந்து தருமத்தில் இடமிருக்கிறது ஹிந்து மதம் வேதச் சுருதியாலானது.

வேதம் எல்லையற்றது; அது ஒரு நூலன்று. பல முனிவர்கள் பல முறை கண்ட உண்மைகளின் தொகுப்பே தான் வேதம் ஆருயிர்களுக்கும் ஆண்டவனுக்கும், ஒருயிர்க்கும் மற்றொருயிர்க்குமுள்ள அத்யாதமத் தொடர்புகளைப் பூரணமடைந்த வேதரிஷிகள் கண்டு பிடித்தனர். அவர்களில் மிகப் பெரியோர் சிலர், பெண்பாலர் என்பதை இந்தச் சபைக்கு நான் மகிழ்வுடன் அறிவிக்கிறேன்! (அற்புதமான சமயம்! கரகோஷம்!)

ஆண்டவன் வரம்பில்லாத ஆற்றல் படைத்த அந்தர்யாமி. அவன் ஓயாமல் படைக்கிறான் படைக்கப் பட்டது மீண்டும் அழிகிறது. ஆனால் அழிவது யாக்கை; 'நான்' என்று முள்ளவன். "நான்" ஆத்மா. என்னை வாளும் தீயும், நீரும் காற்றும் அழிக்க முடியாது. ஆத்மா உள்ளத்தில் நிலையாக வுள்ளது. அது உடலுக்குடல் வினைப் பயனால் மாறினும் அது உடலுக்கு கட்டுபட்டதன்று; அது என்றும் சுதந்திரம், சுத்தம், பூரணம். ஆன்மா முன்னுடல் விட்டுப் புத்துடலடைவதே சாவு எனப்படுகிறது. பழவினையால் இகவாழ்வு தீர்மானிக்கப்படுகிறது. இப்படி காரண காரிய வினைச் சுழலில் அகப்பட்டலையும் மானிடப் படகு கரை சேர வழியுண்டோ? வேத முனியின் ஆவேச வுண்மை கூறுகிறது: **அம்ருத புத்ரர்களே,** கேளுங்கள்; வானோருங் கேளுங்கள்; புராதன **ஒன்றை** யான் கண்டு பிடித்தேன்; அது மோகன விருளுக்கப்

பாலுள்ளது. அதனை யறிந்தே நீங்கள் சாவினின்று விடுபடுவீர்கள்!

அம்ருத புத்ரர்கள் (சாகாப் புதல்வர்), ஆ, எவ்வளவு கம்பீரமான இன்சொல்! சகோதரர்களே, நான் உங்களை அவ்வினிய பெயரால் அழைக்கிறேன் (கரகோஷம்) உங்களைப் "**பாவிகளா**" என்று ஹிந்து அழைக்க மறுக்கிறான். நீங்கள் கடவுள் மைந்தர்கள்; நித்யானந்தர்கள். புனிதர், பூரணர்; நீங்கள் உலகில் தெய்வத்தன்மை கொண்டிருப்பவர்கள். "**பாவிகளா?**" ஆ! மனிதனை அப்படி அழைப்பதே பாவம். அது மனித இயல்பை இழந்ததாகும்.

நாம் பாபிகளா?

வாருங்கள் சிங்கங்களே! நீங்கள் ஆடுகள் என்னும் மோகத்தை உதறித் தள்ளுங்கள்! நீங்கள் நித்யாத் மாக்கள், சுதந்திர ஜீவகர்கள், நித்யானந்தர்கள். நீங்கள் ஜடமா; உடலா? இல்லை. ஜடம் உங்கள் அடிமை. நீங்கள் அதன் அடிமையல்லீர். இயற்கை விதிகளனைத்திற்கும் மேலே ஒருவன் உள்ளான்! அவன் கட்டளையால் காற்றடிக்கிறது; தீ எரிகிறது; முகில் பொழிகிறது; சாவு உலகில் நடமாடுகிறது. அவனியல்பென்ன? அவன் எங்குமுள்ளான், சுத்தன், அருவன், எல்லாம் வல்லவன், பரதயாநிதி! "நீ எங்கள் தந்தை, தாய், நண்பன்; நீ வீரியத்தின் ஊற்று; எங்களுக்கு வீரிய பலந் தந்தருள்! நீயே உலகத்தைத் தாங்குவோன். இச்சிறு வாழ்வு மூட்டையைப் பொறுக்கத் துணை செய்!" என்று வேதரிஷிகள் பாடினர்.

ஆண்டவனை நாம் வழிபடுவதெப்படி? அன்பால்! இகம் பரம் இரண்டிலும் உள்ளதெனினும் அவனே அரியோன், வணங்கத் தக்கோன், காதலிக்கத் தக்கோன். நீரில் தாமரைப் போல மனிதன் உலகில் ஒட்டாது வசிக்க வேண்டும்; உள்ளத்தை இறைவனிடம் வைத்து தொழில் செய்ய வேண்டும்." ஆண்டவனே! செல்வம், செல்வர்,

கல்வி எதுவும் வேண்டேன்; நினதிச்சை அவ்வாறிருப்பின், ஆயிரம் இடர்களையும் தாங்குவேன். பயன் கருதாது நின்னை அன்பிற்காகவே அன்பு செய்யும் வரம் அருள்!'' என்பது அன்பனின் வேண்டுகோள். கண்ணனின் அன்பன் யுதிஷ்டிரனை, பகைவன் அரசினின்றும் துரத்தினன். யுதிஷ்டிரன் இமயமலையைச் சேர்ந்த ஒரு காட்டில் வசிக்கையில், அவன் மனைவி "உலகில் மாசற்ற நல்லோரான தாஸர்கள் இடர் படுவானேன்?'' என்று கேட்டாள். "இமயமலையைப் பார்! அஃது எனக்கு எதுவும் தருவதில்லை. அதன் அழகுப் பெருமைக்காகவே அதை இயல்பாகவே நான் நேசிக்கிறேன். அதுபோல இறைவன் அழகிய ஊற்று. எல்லா மேன்மைகளுக்கும் தாயகம். அவனே அன்பு செய்யத்தக்கவன். ஆதலால், பலனை எதிர்பாராமல் அவனையே அன்பு செய்கிறேன். அவனிச்சை எது வேண்டுமெனினும் செய்யட்டும்! நான் அன்பிற்காக அன்பு செய்கிறேன். அன்பால் பேரம் செய்யவில்லை என்றார்.'' (கரகோஷம்!)

ஆன்மா தெய்வத் தன்மையுள்ளது. ஆன்மா உடலில் கட்டுப்பட்டுள்ளது; பந்தம் சிதைந்தால் முக்தி யெய்தும் ஆண்டவன் அருளால் தூய முக்தி பெறுவர்: சுத்தமே அவனருளைத் தரும், தூய உள்ளத்தில் அவன் துலங்குவான். மாசறுதூயன் இவ்வாழ்விலேயே இறைவனைக் காண்கிறான். பிறகே, மனக்கோணல்களும் மயக்கங்களும் ஒழியும். ஹிந்து மதம் அனுஷ்டான மதம்; வார்த்தையாடும் மதம் அன்று. "நான் ஆன்மாவைக் கண்டேன்'' என்று ஹிந்து முனி நிதர்சனமாகக் கூறுவான். பூரணம் பெற்று, தெய்வத் தன்மையடைந்து கடவுளைக் காணவே பிரம பிதாபோலவே பூரணம் பெறவே—ஹிந்து தருமம். கடவுளடைவே களிப்பு; கடவுட் காக்ஷியோன் கரை கடந்த களிப்புறுவான். இஃது இந்தியாவிலுள்ள எல்லாச் சமயங்களின் சம்மதமுமாகும்.

பூரணன்மா பிரம்மத்துடன் ஒன்ருகிறது; பிரம்மம் சச்சிதானந்தம்; அதுவானுல்தான் இன்பம். சாக்காட்டுலகில் நித்தியப் பொருள் அதுவே! மாறும் உலகில் மாருதுள்ளதும் அதுவே. எப் பெயர் பெறினும், மலர் ஒரே மணங் கமழும்: அதுபோலவே பல நாம ரூபங்களால் ஹிந்து ஒரே கடவுளேயே வணங்குகிருன். எல்லா ஜீவர்களும் பரமாத்ம விளக்கமே.

நான் சிறுவனுயிருக்கையில் ஒரு பாதிரி ஜனங்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்தார். அவர் பேசிய மதுரமான விஷயங்களில், "உங்கள் விக்ரகத்திற்கு ஓர் உதை கொடுத்தால் அது என்ன செய்ய முடியும்?" என்ருர். அந்தக் கூட்டத்தில் ஒருவர், "உங்கள் சாமியை வைதால் அது என்ன செய்யும்?" என்ருர். "செத்த பின்னர் நீ தண்டிக்கப் படுவாய்" என்ருர் பாதிரி. "என் விக்ரகமும் நீ இறந்த பிறகு உன்னேத் தண்டிக்கும்" என்ருர் அவ்ர். (கரகோஷம்) கிருஸ்தவர் சர்ச்சுக்குப் போவானேன்? வானே நோக்கித் தொழுவானேன்? கத்தோலிகர் கோயில்களில் அவ்வளவு சிலைகள் இருப்பானேன்? ப்ரோடஸ்தாந்தியர் தொழும் போது அவர்கள் மனதில் பல வடிவங்களிருப்பானேன்? என் சகோதரர்களே, மனவுருவின்றி எதையும் நாம் நினைக்க முடியாது. உருவம் ஏகாக்ரப்படுத்துகிறது. சிலை, கோயில், சர்ச்சு, நூல்கள் எல்லாம் மனிதன் தெய்வ உணர்வு பெறும் சாதனங்கள். அவை அத்யாத்ம குழந்தைப் பருவத்தின் விளையாட்டுச் சாமான்கள்.

புற வழிபாடு (உருவ வழிபாடு), தாழ்ந்தது; மன வழிபாடு நடுத்தரம்; கடவுளையறிதலே உயர் வழிபாடு. இரவி மதி, மீன்கள், மின்னல் எல்லாம் அவன் ஒளியாலேதான் நிலவுகின்றன; உருவழிபாடு ஹிந்து மதத்தின் கட்டாயமல்ல. ஹிந்துவானவன் வேறுபாடுகளில் ஒருமைப்பாட்டைக் காண்கிருன். பிற மதங்கள் சில கோட்பாடுகளே வற்புறுத்துகின்றன. கடவுளே அனுபவத்தில் காணவே

முடியும். 'உரு, சிலுவை, பிறை எல்லாம் கடவுள் பாவனையை மாட்டி வைக்கும் ஆப்புகள் (Begs) என்றே ஹிந்து மதம் அறிந்திருக்கிறது. மனப்பக்குவம் பெருதவர்களுக்குக் கடவுளைப்பற்றி பாவனை கற்பிக்கவே உருவம் வழங்கப்படுகிறது. 'பல வழிகளால் ஒரே கடவுளை யடைவதே சர்வ சமயப் பொருள்' என்பது ஹிந்துவிற்குத் தெரியும். பல நிறக் கண்ணுடிகளில் பாய்ந்து வரும் ஓர் ஒளிபோன்றது கடவுளறிவு; "கயிற்றில் மணிகள் கோத்திருப்பது போன்று சேதனத்தில் எல்லாம் தொடுக்கப்பட்டுள்ளன. பரமபரிசுத்தம், அற்புத சக்தி ஆகியவை மனித வாழ்வைத் தூய்மையாக்கி எங்கு ஓங்குகின்றனவோ அங்கு யானிருக்கிறேன் என்றறி!" என்கிருர் **கிருஷ்ண பகவான்**, "நமது ஜாதி மதத்திற்கு அப்பாலும் பூரண புருஷர் உள்ளனர்" என்கிருர் **வியாசபகவான்**. புத்தர்களும் ஜைனர்களும் கடவுளை ஒப்பவில்லையாளுலும், மனிதன் தெய்வத் தன்மையை யடைவதை யொப்புகின்றனர். அவர் தந்தையைக் காணுவிடினும் மைந்தனை ஆன்மாவைக் காண்கின்றனர். மைந்தனைக் கண்டவன் தந்தையைக் கண்டவனே. உலகளாவிய ஒரு மதமானது, இடம் காலங்களிற் கட்டுப்படாது. அது, அதன் சம்மதமான கடவுளை போலவே அகண்டமானது. அதன் சூரியகாந்தி கிருஷ்ண பக்தர், கிருஸ்து, நல்லோர், பொல்லோர் யாவருக்கும் சமமாகப் பரவும். அதன் அகண்ட சமரஸத்தில் உலகிலுள்ள எல்லா சமயங்களுக்கும் இடந்தந்து, உயர்ந்தோரையும், தாழ்ந்தோரையும் தன்னுள்ளடக்கிப் படிப்படியாக உயரும்; அந்த மதத்தில் வெறுப்பிற்கும் கொடுமைக்கும் இடமிருக்காது. ஆண் பெண் இருவரிலும் அது ஒரே தெய்வத் தன்மை காணும்; மனிதனிலும் அவனுள் உள்ள கடவுளைக் காணவே அது கருதும்; அத்தகைய மதத்தை அனைவரும் ஒப்புவர். ஹிந்துக்களின் பிரம்மம், ஜாரதுஷ்டாரின் அஹுரா மஜ்தன், பௌத்தர்களின் புத்தன், யூதரின்

யஹோவா, கிருஸ்துவரின் பரலோகபிதா என விளங்கும் கடவுள் ஒன்றே. 'எல்லா சமய சாரமும்—ஒரு கடவுளே' என்று முழங்குக! அமெரிக்கர்களே, உங்களுக்கு இறைவன் சக்தி யருளுக! வாழ்க **கொலம்பியா**—சுதந்தரத்தாய்! அயலான் ரத்தம் தோயாத கை, உனதே! 'அயலானைத் திருடுதலே சுருக்கு வழி' ஒருக்காலும், கருதாத கொலம்பியாவே, சர்வ மதசமரசக் கொடியை நாகரீக உலகின் முன்னே பிடிக்க நீயே கொடுத்து வைத்தனை! நீ வாழ்க! (பலத்த கரகோஷம். பேஷ்!—பேஷ்!)

முடிவுரை

அன்பர்களே! இன்னும் சிறிது செவி சாயுங்கள்!

இன்று உலக சர்வமத சங்கம் நிறைவேறியது. இதை தொடங்கியோர்பால் ஆண்டவன் அருள் பாலித்து, அவர்களுடைய தன்னலமற்ற உழைப்பிற்கு வெற்றி முடி சூட்டினன். இந்த உயர்ந்த வினையைக் கருதிய தாராள மனங்கொண்ட உண்மையாளருக்கு எனது வந்தனம். இம்மேடையிற் பொழிந்த தாராளக் கொள்கைகள் அடங்கிய சொற்பொழிவுகளுக்கு எனது வந்தனம். என்மேல் மாறு அன்பு பூண்டு மத வேற்றுமைகளை நீக்கும் கருத்தையும் ஏற்ற இச்சபை யறிஞர்களுக்கு எனது வந்தனம். இடையிடையே சில அபஸ்ரவங்களும் கேட்டன. அவற்றிற்குச் சிறப்பாக எனது வந்தனம்: அவற்றின் வேறுபாட்டால் நமது இசைமணி இன்னும் இனிதொலித்தது. சமயவொற்றுமைக்குரிய பொதுமையைப் பற்றி மிகவும் விரித்துரைக்கப் பெற்றது. ஒரு மதத்தை யழித்து இன்னொரு மதம் ஓங்குவதால் இந்த சமரஸம் ஏற்படுமென்று யாராவது கருதினல், சகோதரரே உங்கள் எண்ணம் பலிக்காது என்று அன்னருக்குச் சொல்கிறேன். கிருஸ்தவன் ஹிந்துவாக வேண்டுகிருனா? ஹிந்து அல்லது பௌத்தன் கிருஸ்தவனாக வேண்டுகிருனா? ராம்ராம், இல்லை!

பூமியில் விதையை விதைக்கிறோம். நிலமும், நீரும் காற்றும் அதைச் சுற்றியுள்ளன. என்றாலும், விதை மண்ணாக, காற்றாக, அல்லது நீராக மாறுகிறதா? இல்லை! அது ஒரு செடியாகிறது; அதன் சுதர்மப்படி காற்றையும் மண்ணையும் நீரையும் தாவர சத்தாக்கியுண்டு வளர்கிறது; அம்மாதிரியே மதமும். கிருஸ்தவன், ஹிந்து, பௌத்தனாக வேண்டுவதில்லை; ஹிந்து அல்லது பௌத்தன், கிருஸ்தவனாக வேண்டுவதில்லை. ஆனால், ஒவ்வொன்றும் பிற மதங்களின் சாரத்தை கிரகித்து, தனது தன்மையைப் போற்றி சுதர்மத்தில் வளர வேண்டும்.

இதுவே இந்த **சர்வ மத சபை** உலகிற்குக் காட்டிய உண்மை. தெய்வத் தன்மை, பரிசுத்தம், கற்பு என்பன ஒருவருக்கே, ஒரு மதவாதிக்கே உரியனவல்ல; ஒவ்வொரு மதத்திலும் உன்னத வொழுக்கமுள்ள மகான்கள் உண்டு என்பதை அவை தெளிவு படுத்தின. உண்மை இப்படியிருக்கையில், எவனாவது ஒருவன் பிறர் மதமழித்துத் தனதே வாழக் கருதுவானாயின், அவனைக் குறித்து மனதார இரங்கி, எத்துணை எதிர்ப்பு வரினும் அதிசீக்கிரம் உலகிலுள்ள ஒவ்வொரு சமயக் கொடியிலும், "**போரன்று. உதவியே; அழிப்பன்று, அணைப்பே; விரோதமன்று, சாந்தமும் சமரஸமுமே**" என்று எழுதித் திகழ்வதைக் காண்பிப்பேன்! ஓம் தத்ஸத் (நீண்ட கரகோஷம்!)

விவேகானந்த சுவாமி கீ

ஜே! ஜே!! ஜே!!!

சுபம்

வாழ்க காந்தீயம்!

மகாத்மா காந்தி என்ற பெயரைக் கேட்டதுமே இந்தியர்களாகிய என் தமிழராகிய நமக்கு தனி ஆர்வமும், தன் நம்பிக்கையும் ஏற்பட்டு வந்தது. நமது நாட்டைப் பற்றி உலகத்தில் அறியாத நாடுகளே இல்லை என்று துணிந்துக் கூறலாம். நாமும் மனிதர்கள், நமக்கும் சுய அறிவு உண்டு, அதை பிறரிடமிருந்து விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லை என்று அயல்நாடானைவரும் அறியச் செய்தப் பெருமை அவரையே சார்ந்தது. இன்று நாற்பது கோடி மக்கள் சுதந்திரம் அடைந்த அத்தனைப் பொறுப்பும் அவரைச் சார்ந்தது தான்.

மக்களிடம் சுயராஜியம் பெறவேண்டும் என்ற ஆர்வத் தீயை மூட்டி, அதற்காக எந்த தியாகத்தையுஞ் செய்ய சலிக்காத ஊக்கமளித்து, தமிழனை தட்டிக் கொடுத்தவரும் அவரே! இன்று இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்திற்கும், நாமும் மனிதர்கள் என்று பிறநாட்டார் மதிப்பதற்கும் காரணம் அவரேதான்.

சத்தியம், அஹிம்சை, அன்பு, தன்னடக்கம் முதலிய உத்தம நெறிகளுக்கு நாயகமாய் விளங்கி, அதை செயலளவில் நமக்கு நடத்திக் காட்டி, உலகோர் அனைவருக்கும் தீமை செய்யாது, நன்மையே செய்து, ஆத்மீகத் துறையிலும், அரசியலிலும் ஓயாது உழைத்து வந்த உத்தமனை இன்று நாம் பிரிந்து நிற்கின்றோம் :—

எத்திசையிலுமிருந்து அத்தனை யோசனைக் கேட்கும் குரலைக் கேட்கக் காண்கிலோம். அண்ணலைப் போன்ற அருந்தியாகியை அவனியில் என்று காண்போமோ!

செய்நன்றி மறவாத தமிழன் அன்னார் செய்த பெரு நன்றியை மனதிற்கொண்டு, அவர் போதித்த உத்தம நெறியைப் பின்பற்றி பெற்ற சுதந்தரத்தை துண்டாட இடங்கொடாது காப்பாற்றி, உலகம் புகழ தலைநிமிர்ந்து **வாழ்க காந்தீயம்** ! என்று சொல்லி மகிழ்வானாக!

வாழ்க காந்தீயம்!

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
[redacted]
105747
EGMORE, MADRAS-600 008
6NAY3,T
N49

"அமாவாசையும் - ஸ்ரீ வீரராகவனும்"

இப்புத்தகம் அமாவாசை விரதமேன்? வீரராகவன் யார்? அவன் திருக்கோயில் எங்கே? அவன் ஏன் அவதாரஞ் செய்தான்? யார் யாருக்கு காக்ஷி யளித்தான்? யாரை மாய்த்தான்? என்பதை விளக்கும் சிறிய நூல்.

விலை அணா 0-2-0

"அன்று கண்ணன், இன்று காந்தி"

இக்து உலக மக்கள் உய்ய, அன்று பாரதப் போரில் காண்டீபனை சிஷ்யனாகக் கொண்டு **கண்ணன்** சொன்னதென்ன? பாரத மக்கள் வஞ்சம், பொய், சூது, திருடுகள் முதலியன விடுத்து ஒன்றுபட்டு சுதந்தரமெய்தி வாழ இன்று மகாத்மா காந்தி யடிகள் போதித்ததென்ன? என்பதை உணர்த்தும் சிறு நூல்.

விலை அணா 0-1-0

"கோதை கண்ட கனவு"

சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் **ஸ்ரீ ஆண்டாள்** அரங்கனை தான் மணந்துக் கொண்டதாக கனவு கண்டதை "**வாரணமாயிரம்**" என்ற தலைப்பு பாசுரங் கொண்ட 10 பாசுரங்களின் தார்பரியங்கள் "**ஆயனால்**" எழுதப் பட்டு அச்சிடப்பட்டுள்ளது. மாதர்களும் அவசியம் வாசிக்க வேண்டிய சிறு நூல்.

விலை அணா 0-2-0

"மகாத்மா காந்தி தியானம்"

இன்று உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி மீது 10 பாடல்கள் விருத்தமாக பாடியுள்ளார் "**ஆயன்**" வெகு அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை அணா 0-2-0

மகாத்மா காந்தியின் பொன் மொழிகள்

இது நமது தமிழ்நாட்டில் காந்தி யடிகள் விஜயஞ் செய்து பிரார்த்தனை நடத்திய வர்ணனை அடங்கியது.

விலை ரூபாய் 1-0-0

"காந்திஜியின் அருள்வாக்கு"

★

உலகம் போற்றும் உத்தமர் நமது அருந்தலைவர் கடவுள் அம்சம் எனத்தகுந்த **காந்தியடிகள்** மக்கள் உய்ய அவ்வப்போது கூறி வந்த பொன் மொழிகளை **ஆழ்வாராதியர்கள், நாயன்மார்கள்,** மற்ற ஆன்றோர்களின் மூதுரையை மேற்கோளுடன் தெள்ளிய தமிழில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கவல்ல வசன நடையில், மேல் அட்டை மூவர்ண படத்துடன் சிறிய பாக்கெட் அளவில் வெளி வந்துள்ளது. அவசியம் படிக்க வேண்டிய நூல்.

★

விலை அணா 0-4-0.

இன்ப நிலயம்

49, பாளையப்பன் தெரு,

ஏழுகிணறு :: சென்னை-1.

"கண்ணன் கீதை"

(பையடக்கமுள்ளது)

★ இதுவரை பல ஆயிரம் மக்கள் படித்து புகழ்ந்துரைத்தது

★ நீங்கள் படிக்காதிருப்பின் உடனே வாங்கிப் படியுங்கள்

கிருஷ்ண பகவான் கீதையில் என்ன சொல்கிறார். மக்கள் யாவரும் சமம், உயர்வு தாழ்வு இல்லை; எனக்கு ஏழை என்றும், பணக்காரனென்றும் பேதமில்லை; உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு எனக்கு கிடையாது. படித்தவன், படிக்காதவன் என்ற வித்தியாசம் எனக்கில்லை, எவன் காம, குரோத, லோப, மத; மாத்சரியத்தை ஜெயித்து அந்தரங்க சுத்தியுடன் என்னை நினைக்கிறானோ, அவனே என் பக்தன். இத்தகைய நிச்சலமான பக்தியின்றி வெளி வேஷப் போடுபவர்களும், பணத் திமிரும், பட்டப் பெருமையும், காம இச்சையும் கொண்டு ஊரை ஏமாற்றுபவர்களும் என்னை என்றும் காண்பதில்லை. அவர்கள் வினையும், அவர்கள் தீய செயலும் அவர்களையே சுட்டெரிக்கும். செய்த வினைகளுக்கு வருந்தி, திருந்தி, சர்வத்தையும் எனக்கு அர்பணஞ் செய்பவனுக்கே எனதருள் கிட்டும் என்ற பரந்த தத்துவத்தை சிறிய அளவில் விளங்க எழுதியுள்ளார் ஆயன். விலையும் மிகக் குறைவே.

விலை அணா நான்கு

இன்ப நிலையம்

43, பாலையப்பன் தெரு, ஏழுகிணறு, சென்னை 1

எனது அடுத்த வெளியீடு: **"ஞான விளக்கு"**